விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 ஆனி 9 றம்ழான் 1 இதழ் 130

யாழ்ப்பாணம் புதன்கிழமை 23—6—82

## பம்பாயில் விமான விபத்து: 17பேர்பலி; 30பேர் படுகாயம்

புதுடில்லி, ஜூன். 22

சிங்கப்பூரிலிருந்து புதுடில்லி நோக்கிவந்த எயர் இந்தியா விமானம் ஒன்று பம்பாயில் தரைஇறங்கும் போது விபத்துக்குள்ளானதால் 17 பேர் பலியாகினர். 30 பேர் காயங்களுக்குள்ளாகியிருக்கின்றனர்.

விபத்தில் பலியானவர்களில் இருவர் விமானச்சிப்பந்திகள்.

பம்பாய் விமானநிலையத்தில் தரையிறங்க முற்பட்டபோது விமானநிலைய வளவிலுள்ள சுவரொன்றில் விமானம் மோதிவிபத்துக்குள்ளானதாக கூறப்படுகிறது.

விமானம விபத்துக்குள்ளாகி தீப்பிடித்து எரிந்துகொண்டிருந்தபோது பல பயணிகள் விமானத்திலிருந்து குதித்து தப்பினர்கள்.

பம்பாய் விமானநிலையத்தில் பயணிகளின் பெட்டிகள் சிதறிக் கிடந்ததாகவும் கூறப்பட்டது.

விமானம்விபத்துக்குள்ளான போது பம்பாய் விமான நிலயத்தில் பலத்த மழை பெய்துகொண்டிருந்ததாகவும் இருளான வேளையில் விமான

[8-ம் பக்கம் பார்க்க]

## ரயில்சேவை சீரானது

(யாழ்ப்பாணம்)

வவனியாவுக்கும் மதவாச்சிக்குமிடையில் பாதிக்கப்பட்டிருந்த ரயில் சேவை மீண்டும் சீராகியுள்ளது

கடந்த ஞாயிற்றுக்கிழமை காங்கேசனதுறையிலிருந்து கொழும்பை நோக்கி வந்த எண்ணெய் ரயில் வண்டி வவனியாவுக்கும் மதவாச்சிக்கும் இடையில் தடம்புரண்டதை அடுத்து வடபகுதி ரயில்சேவை பாதிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

கடந்த திங்கட்கிழமை நண்பகலுடன், ரயில்பாதை சீரமைக்கப்பட்டதைத் தொடர்ந்து சேவைகள் வழமைபோல் நடைபெறுவதாக ரயில்வே அதிகாரி ஒருவர் கூறினர்.

# சாயிபாபா ராஜாங்க விருந்தினராக வருவார்!

## ஏற்பாடுகளைக் கவனிக்கும்படி தொண்டமானுக்கு ஜே. ஆர். பணிப்பு

(கொழும்பு

இந்திய ஆத்மீகத்தலைவராக ஸ்ரீ சாயிபாபாவை இலங்கை அரசு ராஜியவிருந்தினராக அழைத்து கௌரவிக்க முடிவு செய்துள்ளது

ஸ்ரீ சாயிபாபா இலங்கைக்கு வருகைதர இசைந்திருப்பது குறித்து இலங்கை அரசின் மகிழ்ச்சியை அவருக்கு அறிவிக்கும்படி ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்தன நேற்று நடந்த அமைச்சரவைக்கூட்டத்தின்போது கிராமியக் கைத்தொழில்துறை அமைச்சர் திரு எஸ். தொண்டமானைக் கேட்டுக்கொண்டார்,

ஸ்ரீ சாயிபாபாவுக்கு ராஜிய வரவேற்பு அளிக்கப்படும் என்றும் அவரது வருகைக்கான திகதி முதலியவற்றை அறிந்து ஆவனசெய்யும்படியும் ஜனதிபதி திரு. தொண்டமானைக் கேட்டுள்ளார்.

இலங்கையில் ஏராளமான சாயிபாபா பக்தர்கள் இருப்பதால் ஒரு பொதுக்குழுவை அழைத்து அதன் ஆலோசனைகளை அரசுக்கு வழங்கும்படியும் திரு. தொண்டமானை ஜனதிபதி கேட்டுள்ளார்.

ஸ்ரீசாயிபாபா வருகைதரும் போது வழக்கமாக ராஜிய விருந்தினர்களுக்கான டெம்பிள் டிரீஸ் மாளிகையில் அவரை தங்கவைப்பதென்றுஇப்போது முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆனல் ஸ்ரீசாயிபாபா வெளிநாடுகளுக்குச் செல்லும்போது தமது பரிவாரங்களோடு செல்வது வழக்கம் என்பதால் சிராவஸ்தி விடுதியில் அவர்களைத் தங்கவைப்பது வசதியாக இருக்குமா என்பதுபற்றியும் ஆலோசிக்கும்படி ஜனதிபதி கேட்டிருக்கிறர்.

திரு. தொண்டமான் அண்மையில்இந்தியாவில் தமது பேத்தியாரின் திருமணத்துக்காகச் சென்றிருந்த போது ஸ்ரீசாயிபாபாவைச் சந்தித்து இலங்கைக்கு விஜயம் செய்யும்படி கேட்டுக்கொண்டார். அவ் அழைப்பை சுவாமிகள் ஏற்றுக்கொண்டுள்ளார்.

### தபால்-தந்தி அமைச்சரின் கவலை

தபால் தந்தித்துறைகளில் சிறந்தபயிற்சியும் அனுபவமும் பெற்றவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதால் தமது திணைக்களங்கள் பெரிய அளவில் பாதிப்புக்குள்ளாவதாக தபால்-தந்தி தொடர்புகள் அமைச்சர் திரு டி. பி. விஜயதுங்கா நேற்றைய அமைச்சரவைக்கூட்டத்தில் கவலைதெரிவித்தார்.

பிரதம பொறியியலாளர் தரத்திலிருந்து சிறந்த அனுபவம் வாய்ந்த அதிகாரிகள் வரை ஏரானமானவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்கிறர்கள் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

### பரீட்சைகளுக்குத் தனிப் பிரிவு

உயர் கல்வி அமைச்சில் பரீட்சைகளுக்கான தனிப் பிரிவு ஒன்றை ஏற்படுத்துவதென்று அமைச்சரவை தீர்மானித்தது.

8-ம பக்கம் பார்க்க]

## மினிபஸ் - மோட்டார்சைக்கிள் விபத்தில் ஒருவர் பலி! இன்னெருவர் ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சயிக்கிள் – மினிபஸ் விபத்தில் ஒருவர் பலியானர்; இன்னெருவர் ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தெல்லிப்பளை காசிப்பிள்ளையார் கோவிலுக்கு முன் காங்கேசன்துறை வீதியில் இவ் விபத்து நடைபெற்றுள்ளது.

தெல்லிப்பழை கிழக்கைச் சேர்ந்த இராசையா பவனேசன் [23 வயது] என்பவரே பலியானவராவார்.

மோட்டார் சயிக்கிளில்இறந்தவருடன் பிரயாணம் செய்த ஈஸ்வரம்பிள்ளை பரமேஸ்வரம்பிள்ளை (19 வயது) என்பவர் யாழ், ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மரணமடைந்தவரின் விசாரணையை பதில் நீதவான் எஸ். அமிர்தலிங்கம் நடத்திய பொழுது இறந்தவருடன் பிரயாணம் செய்தவர் சாட்சியமளிக்கமுடியாமையால். தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்து, மினிபஸ் சாரதியான மயிலிட்டியைச் சேர்ந்த தம்பு ராமதாஸ் என்பவரை இம்மாதம் 30ம் திகதிவரை றிமாண்டில் வைக்குமாறும், அவரை மல்லாகம் மாவட்ட நீதிபதி முன் ஆஜர் செய்யும்படியும் உத்தரவிட்டார். (மா)

## பிரிட்டிஷ் சிம்மாசனத்துக்கு இரண்டாவது வாரிசு உதயம்! இளவரசி டயனுவுக்கு ஆண்குழந்தை

லண்டன், ஜூன். 22

பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ்ஸின் மனைவியான வேல்ஸ் இளவரசி டயனு நேற்றைய தினம் ஆண் குழந்தையொன்றைப்பிரசவித்தார்.

நேற்று மாலை பிரசவ வேதனை ஆரம்பமானதை அடுத்து லண்டனிலுள்ள சென் மேரிஸ் மத்துவ மனையில் இளவரசி டயனு அனுமதிக்கப்பட்டார் பின்னர் இரவு ஒன்பது மணிக்குப்பின்னரே பிரசவம் ஏற்பட்டது.

இருபது வயதான இளவரசி டயனுவும், சிசுவும் நல்லதேக நிலையில் இருக்கின்றனரென்றும் குழந்தையின் எடை 7 இரூத்தல் 1½ அவுன்ஸ் ஆக இருக்கின்றதென்றும் தெரிவிக்கப்பட்டது.

குழந்தைக்கு இன்னும் பெயர் சூட்டப்படவில்லை. பிரிட்டிஷ் சிம்மாசனத்துக்கு இரண்டாவது வாரிசாக இக் குழந்தை விளங்கவிருக்கின்றது.

இளவரசர் சார்ள்ஸ்ஸின் புதல்வர் பிறந்ததைக்கேள்வியுற்றதும் குழந்தையின்பாட்டியாரான மகாராணியார் மிகவும் மகிழ்ச்சியடைந்திருந்தாரென்றும், சென் மேரிஸ் மருத்துவமனைக்கு வெளியே பிரிட்டிஷ் மக்கள் மகிழ்ச்சி ஆரவாரஞ் செய்தனரென்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வாரம் டயனுவின் மகட்பேறு குறித்து பிரிட்டிஷ் பத்திரிகைகள் வெளியிட்டிருந்த கருத்தொன்றில் டயனுவுக்குப் பிறக்கும் குழந்தை 58% பிரிட்டிஷ் கலப்புடையதாக விருக்குமென்றும் அதன் தந்தையான இளவரசர் சார்ள்ஸ் 30% மட்டுமே பிரிட்டிஷ் கலப்புடையவரென்றும் தெரிவித்திருந்தது.

இது குறித்து மேலும் அளிக்கப்பட்டிருக்கும் விளக்கத்தில் சார்ள்ஸ்ஸின் தந்தையாரான பிலிப் கோமகன்கிரேக்கதேசத்

(8-ம் பக்கம் பார்க்க)

## 3 ராணுவத்தினரும் பிணையில் சென்றனர்

(மாவிட்டபுரம்

அச்சுவேலி துபபாக்கிச்சூட்டு சம்பவத்தில் கந்தையா நவரத்தினம் என்பவர் கொலையுண்டது தொடர்பாகறிமாண்டில் வைக்கப்பட்டிருந்த 3 இராணுவத்தினரும் தலா3000 ரூபா பிணையில் விடப்பட்டுள்ளனர்.

லெப்டினட் டி. சேரம் இராணுவ சிப்பாய்கள், கே.ஜே. சில்வா, ஆர். சி. பி. சில்வா ஆகியோரே பிணையில் விடப்பட்டவர்களாவர்.

மேல்நீதிமன்றம் பிணைக்கு அனுமதி வழங்கியதையத்து மல்லாகம் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆஜர் செய்யப்பட்ட இம்மூவரும் பிணையில் விடப்பட்டனர். (இ)

## நிகஸனக் கொல்ல முயன்றவர் குற்றமற்றவர்! நீதிமன்றம் தீர்ப்பு

வாஷிங்டன் ஜூன் 22

கடந்தவருடம் அமெரிக்க அதிபர் திரு. றெனல்ட் றீகனை துப்பாக்கியால் சுட்டுக்கொலை எத்தனித்தவரான ஜோன் ஹெங்க்லி என்பவர் குற்றமற்றவர் என நீதிமன்றம் தீர்ப்புவழங்கியுள்ளது.

கடந்த ஆண்டு மார்ச்மாதம் 30ம்திகதி ஹெங்க்வு திரு. றீகனையும் மெய்க்காவலர்கள் மூன்றுபேரையும் துப்பாக்கியால் சுட்டுப்படுகாயம் விளைவித்தார். இந்நபர் மனநோயால் பீடிக்கப்பட்டவர் என்பதால் குற்றமற்றவர் என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. ஹெங்க்லி மனநோய் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்படுவார் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். [பி]

## மத்திய கிழக்கு வேலைவாய்ப்பு: மன்னர் மாவட்ட சபையில் விண்ணப்ப படிவங்கள்!

### 15 பேருக்கு இதுவரை 2500 விநியோகம்

[மன்னர்]

மன்னர் மாவட்ட அபிவிருத்திசபையில் மத்திய கிழக்கு நாடுகளில் வேலைபெற்றுக் கொடுப்பதற்கான விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

மன்னர் எம். பி. திரு பி. எஸ்,சூசைதாசனின் சிபார்சின் பேரில் மன்னர் மாவட்டத்தைச் சேர்ந்த 15 பேருக்கு மத்தியகிழக்கு நாடுகளில் வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் பொருட்டே மன்னர் மாவட்ட அபிவிருத்தி சபையினல் விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

15 பேரைத் தெரிவு செய்வதற்கு இதுவரை 2500 க்கு மேற்பட்ட விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. (இ)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

புனரமைக்கப்பெற்ற HONDA C/90, மொடல்கள் விற்பனைக்குண்டு. நா. சாம்பசிவம் அன் கோ, 54 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 3569

சாவகச்சேரிச் சந்தையிலிருந்து 400 யார் தூரத்திற்குள் வீடு கட்டுவதற்கேற்ற 2½ பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு. பரப்பு ஒன்று ரூபா 37,000/-க்கு மேற்பட்ட கோரிக்கைகள் மட்டும் பரிசிலனை செய்யப்படும். விபரங்களுக்கு: திரு. வை. விஜயபாஸ்கரன், நகரசபை அலுவலகம், சாவகச்சேரி தொலைபேசி: 276, சாவகச்சேரி. [3598]

பொன்னாலை வீதியில் சங்கானை சாந்தி படமாளிகைக்கு பக்கமாக வீடு கட்டக்கூடிய 4 பரப்புக்காணி கிணத்துடன் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: கு. கதிர்காமத்தையா ''கணேஷ் ஸ்தாபனம்'' சித்தன்கேணி அல்லது அபிராமி ஜுவலர்ஸ் 387, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். 3620

6 சிறீ 404 பேர்ஜோ கார் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி; 38, யாழ் வீதி, (பெருமாள் கோவிலுக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம். பார்வையிடும் நேரம்:- பி. ப. 4 மணிக்குப் பின்னர். 3614

சகல வசதியுடன் வசிக்கக் கூடிய வீடும் பிரயோசங்களுடன் 10 பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு. ஜோதிட நிலையம், சிவகாமி அம்மன் கோவில் கிழக்கு வீதி, காரைநகர். தொடர்பு: திருமதி க. முத்துச்சாமிக் குருக்கள் 220, கச்சேரி நல்லூர் வீதி, மங்களபதி வைத்தியசாலை யாழ்ப்பாணம். 3619

EN 9000 தொடர் மொறிஸ் -மைனர் காரும் 55ஸ்ரீ 1153 டிப்பிங் ரெயிலரும் (12 ஆணி) விற்பனைக்குண்டு. தொடர்பு: வே. செல்லையா, 315 கண்டி வீதி, பரந்தன். 3618

## கல்வி

ஆங்கில ஆசிரியர் பரீட்சைக்கான வகுப்புகள் 274, முஸ்லிம் கல்லூரி வீதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. 25-6-82ற்கு முன் தொடர்பு கொள்ளவும் - நிர்வாகி 3612

## பயிற்சி

றேடியோ - டெலிவிசன், ஏயர்கொண்டிசனிங், வெல்டிங், Hotel Management மூன்று மாத டிப்பிளோமா பயிற்சி வகுப்புக்கள் சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் ஆரம்பம் 25-6-82 அனைவரும் சேரலாம், நேரில் வரவும் நாஷனல் அக்கடமி, மொம்சாக்கட்டிடம், 11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 3577

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

சுண்டுக்குளி என்னுமிடத்தைச்சேர்ந்தகாலஞ்சென்ற திருமதி லில்லி றெபேக்கா இராசமலர் திசநாயகம் என்பவரின் மரண சாதனமில்லா மரணச் சொத்தினதும் உடமைப் பொருளினதும் விடயத்தில்

— மரணமெய்தியவர்

இலக்கம்: T/3672

மகேந்திரன் சாமுவேல் வைத்தியநாதன் திசநாயகம், 129, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

மனுதார்.

எதிராக

1. ஜோச் செல்வநாதன் திசநாயகம் தற்பொழுது 124/3 A டட்லி சேனநாயக வீதி, டெஹிவலை.
2. டாக்டர் மெல்வின் பாலேந்திரா ஜெகநாதன் திசநாயகம் தற்பொழுது விக்டோரியா வீதி, பானெதி, இங்கிலாந்து.

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கம் கொண்டமரணசாதன வழக்கு மேலேபெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982-ம் ஆண்டு ஆவணி மாதம் 27ம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றான தாக்கப்படலாகாதெற்பதற்குக் காரணம் காட்டுமாறுஇத்தால் தேவைப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி

தா. குலஞானம்
பதிவாளர்

1982-ம் ஆண்டு வைகாசி மாதம் 5-ம் நாளன்று தேதியிடப்பட்டது.

3550




## அறிவித்தல்

தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

கொடிகாமம்

இச்சங்கத்திற்கு சொந்தமான 24 ஸ்ரீ 4764 இலக்கமுடைய ஸ்கூஸ் லொறி பகிரங்க ஏலத்தில் 3-7-82ந் திகதி சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு பிரதம சங்க நிலையத்தில் விற்கப்படும். கேள்வி ரூபா 95000/-வில் இருந்தே ஆரம்பிக்கும். கேள்வி கேட்க விரும்புவோர் 3-7-82ந் திகதி காலை 10-00 மணிக்கு முன் சங்கத்தில் வைப்புப்பணமாக ரூபா 1000/- செலுத்த வேண்டும். வைப்புப்பணம் செலுத்தியவர்கள் மட்டுமே கேள்வி கேட்க அனுமதிக்கப்படுவர். வைப்புப்பணம் திருப்பி ஒப்படைக்கப்படும். லொறி பெறுபவர் மொத்தத் தொகையில் கால் (¼) பங்கை உடன் செலுத்தி மிகுதியை 5 நாட்களுக்குள் கட்டி லொறியைப் பெறவேண்டும்.

லொறி விற்பனை சம்பந்தமான சகல அதிகாரங்களும் மற்படி சங்க நெறியாளர் முடிவிற்கே உண்டு.

காரியாலய நேரத்தில் லொறியைப் பார்வையிடலாம்.

தலைவர்
தென்மராட்சி கிழக்கு
ப. நோ. கூ. சங்கம்,
கொடிகாமம்:
3587

## பின்னுறுதிக்கட்டளை அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

கோப்பாய் என்னும் இடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற இளையதம்பி கந்தையாவினது மரணசாதனமற்ற விடயத்தில்

கந்தையா சிவபாலசுந்தரம், ''இரத்தினவில்லா'', பழந்தெரு. கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

மனுதார்

மூ. இல. 3644/தத்துவம்

எதிராக

1. கந்தையா மகேந்திரராசா.
2. கந்தையா தெய்வேந்திரராசா.
3. கந்தையா சுரேந்திரராசா மூவரும் ''இரத்தினவில்லா'', பழந்தெரு, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
4. இளையதம்பி இராசையா, ''இரத்தினவாசம்'', (பராயமற்ற 3-ம் எதிர்மனுதாரின் வழக்குப் பாதுகாவலர்)

எதிர்மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணச்சொத்து வழக்கு பெயர் மேலே குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்சொல்லப்பட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982-ம் ஆண்டு ஆவணிமாதம் 27-ம் திகதி முற்பகல் 9-00மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1982-ம் ஆண்டு ஆனி மாதம் 16-ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி

தா. குலஞானம்
பதிவாளர்

தயாரித்தவர்கள்:
**பரராஜசிங்கமும் அம்பிகைபாலனும்,**
மனுதாரின் சட்டத்தரணிகள்.
(3560)

## நன்றி நவிலல்

காலஞ்சென்ற டாக்டர் கனகசபாபதி அவர்களின் அன்பு மனைவி சௌந்தராம்பிகையின் ஈமக்கிரியை வியாபாரி மூலை, பருத்தித்துறையில் 16-6-82 அன்று நடைபெற்றபோது நேரில் கலந்துகொண்டும், தந்தி மூலம் அனுதாபந்தெரிவித்த உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்,

பிள்ளைகள், சகோதரர், மருமக்கள்.
253, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்,
19 06-82 (3608)

## வெற்றுப் பரல் விற்பனை

எமது சங்கத்தில் பாவித்த 45 கலன் கொள்ளக்கூடிய வெற்றுப்பரல்கள் 60 அறுபது விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர், பார்வையிட்டு ஒரு பரலின் விலையைக் குறிப்பிட்டு கடித இடதுமேல் மூலையில் ''வெற்றுப் பரல் விலை'' எனக் குறிப்பிட்டு 26-6-82 நண்பகல் 12-00 மணிக்கு முன்பதாக ''பொது முகாமையாளர், கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம், கிளிநொச்சி'' என்னும் முகவரிக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

பொது முகாமையாளர்
கரைச்சி தெற்கு
ப. நோ. கூ. சங்கம்,
கிளிநொச்சி.
3615

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

# கேள்வி அறிவித்தல்

தற்போதுள்ள யாழ்ப்பாண பொதுசன நூலகத்தில்

## திருத்த வேலைகள்

யாழ்ப்பாண பொதுசன நூலகத்தின் சேதத்திற்குள்ளான ஓர் பகுதியாகிய வடக்குப்புற கட்டிடத்தினை (மேல் மாடி உட்பட) திருத்தி புனரமைத்துக் கட்டுவதற்கான அரக்குமுத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்துடனோ அல்லது அரசாங்க கட்டிடத் திணைக்களத்தினுடனோ அல்லது தேசிய வீடமைப்பு அதிகார சபையுடனோ ரூபா ஒரு இலட்சத்திற்கு குறையாத தொகைக்கு ஒப்பந்தகாரராக பதிவு செய்துள்ளவர்களிடமிருந்து, யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 15-07-82-ந் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து 14-07-82-ந் திகதி புதன்கிழமை பிற்பகல் 3-00 மணி வரை மீளளிக்கப்படக்கூடிய கேள்வி வைப்புப் பணமாக ரூபா 1000/-, மற்றும் கேள்விப்பத்திரப் படிவப ஆவணங்களின் பெறுமதியாக மீளளிக்கப்படாத தொகையாக ரூபா 150/- செலுத்துவதன் பேரில் பெற்றுக்கொள்ளக்கூடிய பத்திரங்களின் இணைப்பிரதிகளில் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து அறிந்துகொள்ளலாம்.

**சி. வி. கே. சிவஞானம்,**
மாநகர ஆணையாளர்,
மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்,
21-06-82. (3609)

## விளையாட்டு போட்டி

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டிகளும் பரிசளிப்பு வைபவமும் எதிர்வரும் ஜூலை மாதம் 2ந் திகதி நடைபெறும். இவ்வைபவத்தில் தீவுப்பகுதிப் பிரதிநிதி பண்டிதர் கா. பொ. இரத்தினம் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார். விளையாட்டுப் போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும் மகா வித்தியாலய அதிபர் திரு பி. எம். அன்ரனி, உடற்பயிற்சி ஆசிரியர் திரு ச. கணேசதாசன் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

●

நெடுந்தீவு மேற்கு சைவப் பிரகாச வித்தியாசாலையின் வருடாந்த இல்லப் போட்டிகளும் பரிசளிப்பு வைபவமும் எதிர்வரும் 28ந் திகதி திங்கட்கிழமை நடைபெறும். பிரதம அதிதிகளாக புங்குடுதீவு வட்டாரக் கல்வி அதிகாரி திரு வ. ஏகதாஸனும் தீவுப்பகுதி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினமும் கலந்து கொள்வார்கள். போட்டிக்கான ஏற்பாடுகளை மேற்படி வித்தியாலய அதிபர் திரு சு. குமாரவேலு உதவி ஆசிரியர்கள் திருவாளர்கள் செ. பகேசு, சு. தியாகலிங்கம் ஆகியோர் கவனித்து வருகின்றனர்.

## உருத்திரபுரம் நோயாளர் கஷ்டம்

[கிளிநொச்சி]

உருத்திரபுரம் அரசினர் ஆஸ்பத்திரியில் போதியளவு மருந்து இல்லாததினால் இப்பகுதி நோயாளிகள் மிகுந்த கஷ்டம் அனுபவிக்கின்றனர் கிளிநொச்சிக்கும் உருத்திரபுரத்திற்குமான பஸ்சேவையும் வீதிச்சீர்கேட்டால் நடைபெறாத நிலையில் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்குத்தன்னும் நோயாளர்கள் வரமுடியாதிருப்பதாக இப்பகுதிமக்கள் தெரிவித்தனர். (அ)

## தற்காலிக கங்காணிமார் அமிரிடம் கோரிக்கை

(மண்டைதீவு)

வேலணை பெரும் தெருக்கள் திணைக்களத்தைச் சேர்ந்த தற்காலிக கங்காணிமார்களுக்கு மாதத்தில் பத்து நாட்கள் மட்டும் வேலைவழங்கி வருவதால் ஏழைத் தொழிலாளர்கள்வாழ்க்கை செலவை சமாளிக்க முடியாமல் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். தொடர்ந்து மாதத்தில் 22 நாட்கள் வேலை வழங்கவேண்டும்' என்றுஎதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்துக்கு கடித மூலம் புகார் செய்யப்பட்டுள்ளது,

அத்துடன் நேரில் இதுசம்பந்தமாக பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு வசதியான திகதியை அறிவிக்கும்படி மேற்படி கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது.

## வீட்டு உபகரணங்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

பொம்மைவெளிக் குடியேற்றத்திட்டத்தில் அண்மையில் தீவிபத்துக்குள்ளான ஏழு வீடுகளையும் புனரமைப்பதற்கு, யாழ். முஸ்லிம் அபிவிருத்திச் சங்கம் 7,000 ரூபாவுக்கான வீடமைப்பு உபகரணங்களை வழங்கியுள்ளது.

முஸ்லிம் அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஜனாப் ஏ. எச். ஹாமீம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் வைத்து இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த எரிந்த வீடுகளைப் புனரமைக்கும் பணியில் யாழ். மாநகர சபை உறுப்பினர்கள் ஜனாப் எஸ். எம். சுல்தான் ஜனாப் ஷாகுல் ஹமீட் ஆகியோர் ஈடுபட்டுள்ளனர். (மா-இ)

## "தேசிய அணுகு முறையில் தமிழ் மக்களின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு நல்குவோம்"

### யாழ். நகரில் இந்தியத் தூதுவர்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன, எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா ஆகியோர் கலந்துகொண்ட யாழ் பொதுநூலக நிதி, நூல்சேகரிப்பு தொடர்பான வைபவத்தில் நானும் கலந்துகொண்டேன். எனது சமீபத்திய சென்னை விஜயத்தின்போது தமிழக அரசுடனும் இதுபற்றி உரையாடினேன். தமிழக அரசின் செயலாளர் கல்வித்திணைக்களம் மூலமாக நூல்கள் சேகரிக்கப்படுவதாக தெரிவித்தார். இந்திய மத்திய அரசிடமும் நூலகத்தின் தேவைகள் பற்றி தெரிவித்துள்ளேன். மீண்டும் யாழ் பொதுநூலகம் சிறந்ததோர் கல்வி மத்திய ஸ்தானமாக விளங்கும் வகையில் இந்திய அரசு அனைத்து உதவிகளையும் நல்கும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் வந்திருந்த இந்தியத் தூதுவர் திரு. தோமஸ் ஏபிரகாம், நேற்றுமுன்தினம் யாழ் மாநகரசபையால் அளிக்கப்பட்ட தேநீர் விருந்துபசாரத்தின்போது உரையாற்றுகையில் தெரிவித்தார். யாழ் மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் தொடர்ந்து உரையாற்றுகையில் அவர் குறிப்பிட்டதாவது:

நான்கு ஆண்டுகட்கு முன்பு இலங்கையின் தூதுவராக எனது நியமனப்பத்திரத்தை ஜனாதிபதியிடம் கையளித்த பின் அநேகமாக ஆண்டுக்கொருமுறை யாழ் நகருக்கு வருகைதந்துள்ளேன். கண்டிக்கு மாதமொருமுறை செல்வதுண்டு. இந்தியத் தூதுவரின் யாழ் விஜயம் குறிப்பிடத்தக்கதொன்றாய்ச் சிலருக்கு தெரிவதுண்டு. யாழ்ப்பாணமும் இலங்கையின் ஒரு பகுதியே. நான் முழு இலங்கைக்குமே தூதுவராக கடமை புரிகின்றேன். காந்திஜி; நேருஜி ஆகியோரால் தேசிய சிந்தனையில் வளர்க்கப்பட்ட தலைமுறையைச் சார்ந்தவர் நாம். என்னைப் பொறுத்தமட்டில் ஜாலியன் வாலாபாக்கில் 1919ல் நடைபெற்ற சம்பவத்தையடுத்த 65ஆண்டு கால தேசியப் பாரம்பரியம் நமக்குண்டு. உள்விவகாரங்களில் தலையிடாது தேசிய அணுகுமுறையில் தமிழ்மக்களின் அபிவிருத்திக்கு, உணர்வுகட்கு ஒத்துழைப்பு நல்குவோம்.

யாழ் நகரம் கடந்த மூன்று ஆண்டுகளில் மிகவும் அழகான நகரமாக உருவாகியிருப்பதை பாராட்டாதிருக்க முடியாது. கடல் சூழ்ந்த நம் கேரளத்து மக்கள் உலகெங்கும் பரந்து வாழ்கிறார்கள். 1953ல் இமயமலை ஏறிச்சென்ற டென்சிங்கையும், ஹிலாரியையும் கேரளத்தைச் சேர்ந்த முஸ்லீம் ஒருவர் உச்சியில் நின்று ''சாயா'' வேண்டுமா எனக் கேட்டாரென்று கூட வேடிக்கையாகச் சொல்வார்கள். அவ்வாறு நாம் எங்கும் பரந்து வாழ்வதுண்டு. எங்கு நானும் எனது மனைவியும் சென்றாலும் யாழ்ப்பாணத்தை மறக்கமாட்டோம். மறக்கமுடியாதவாறு மிகநெருங்கிய நண்பர்கள் பலர் எனக்கு இங்கு உள்ளனர். (சிமா)

## இந்திய ஜனாதிபதி தேர்தல்

### இந்திரா காங். வேட்பாளர் அமைச்சர் ஸெயில்சிங்

புதுடில்லி, ஜூன் 22

அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் இந்திய ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட மத்திய உள்துறை அமைச்சரான திரு. ஸெயில்சிங் இந்திரா காங்கிரஸ் வேட்பாளராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் பிரதமர் இந்திராகாந்தி தலைமையில் கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர் திரு. ஸெயில்சிங்கை தமது வேட்பாளராக நிறுத்துவதென ஏகமனதாக முடிவுசெய்தனர்.

இந்திய ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பாளர்களை அறிவிக்கும் கடைசித்தினம் இன்று என அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. ஸெயில்சிங் சீக்கிய இனத்தின் சிறுபான்மை சமூகத்தைச்சேர்ந்தவராவார். ஜனாதிபதி தேர்தலில் தமிழ்நாடு ஆளுங்கட்சியான அ. தி. மு. க. வும் எதிர்க்கட்சியான தி. மு. க வும் இந்திராகாங்கிரஸ் வேட்பாளரையே ஆதரிப்பதென முடிவுசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (கி-இ)

### எதிர்க்கட்சி வேட்பாளர் முன்னாள் எம். பி. முகர்ஜி

புதுடில்லி, ஜூன் 22

இந்திய ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்னாள் லோகசபை உறுப்பினரும் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவருமான பேராசிரியர் ஹிரேன் முகர்ஜியை இந்திய எதிர்க்கட்சிகள் தெரிவுசெய்துள்ளன.

நேற்றுமுன்தினம் இந்திய பாராளுமன்றத்தில் கூடிய எதிர்க்கட்சிகள் ஏகமனதாகவே பேராசிரியர் முகர்ஜியை தமது வேட்பாளராக தெரிவுசெய்தன.

தற்போதைய உபஜனாதிபதியான ஜனாப் முகமத் ஹிதாயத்துல்லாவையே ஜனாதிபதித் தேர்தலுக்கு நிறுத்தி அவரை ஆதரிப்பதென எதிர்க்கட்சிகள் முன்பு தீர்மானித்திருந்தபோதிலும் ஜனாப் ஹியாத்துல்லா தாம் ஜனாதிபதி தெரிவுக்குப் போட்டியிட விரும்பவில்லை என தெரிவித்ததையடுத்தே முகர்ஜி தெரிவுசெய்யப்பட்டார். (கி-இ)

## "81-ல் இடம்பெற்ற கொடூர இனக்கொலை குறித்து இந்திய எம். பி.க்கள் எழுப்பிய குரலே இலங்கை அரசின் கண்ணைத்திறந்தது"

### எதிர்க்கட்சித்தலைவர் 'அமிர்' கூறுகிறார்

[யாழ்ப்பாணம்]

1981ம் ஆண்டு ஜூன் மாத காலப் பகுதியில் இலங்கையில் இடம்பெற்ற கொடூர இனக்கொலை குறித்து தமிழகத்தில் மட்டுமல்ல, புதுடில்லியிலுள்ள லோக சபையிலும் ராஜ்ய சபையிலும் இந்தவெறியாட்டம் நிறுத்தப்படவேண்டும் என்று வடநாட்டு எம். பி.க்களும் எழுப்பிய குரலே இலங்கை அரசின் கண்களைத் திறக்கச் செய்தது.

இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் இந்தியத் தூதர் முன்னிலையில் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

ஈழத்தில் தமிழ் மக்கள் துன்பப்பட்ட நேரங்களில் தென்னாட்டுத் தமிழ்ச் சகோதரர்கள் கண்ணீர் சிந்தி கவலைப்பட்டதுமன்றி சிலசமயங்களில் தமது எதிர்ப்பினையும் ஓரணியில் திரண்டு நின்று காட்டத் தவறவில்லை.

எவர் விரும்பினாலும் விரும்பாவிடினும் ஈழத் தமிழர்கள் இந்தியாவைத் தாய் நாடென்றே கொள்வதால் எமது நாட்டின் மீது அவர்கள் விசுவாசமற்றவர்கள் என்று பொருளாகாது. இலங்கை இந்தியாவின் சேய் என்றே அவர்கள் கருதுகிறார்கள். ஏனெனில் நமது பிணைப்பு இரத்தத்துடன் கலந்த பிணைப்பாகும். இந்தியாவின் விடுதலையும், மறுபலர்ச்சியும் தான் இலங்கையின் விடுதலைக்கு முன்னோடியாக அமைந்த போதும் இந்தியாமீது பெரும்பான்மைச் சமூகம் சந்தேகக் கண்கொண்டு பார்க்கத் தவறுவதில்லை. எது எப்படி இருந்தபோதும்—அரசு எப்படியாய் அமைந்தபோதும் 1962ல் நடைபெற்ற இந்திய—சீன யுத்தத்தின்போது தமிழர்கள் உணர்ச்சி வசப்பட்டவர்களாக இந்தியாவின் பக்கம் நின்றார்கள். இந்தியாவின் சிறப்பிலே தாம் ஆசிய மக்களின் சிறப்பு அடங்கியிருக்கின்றது எனும் அசையாத நம்பிக்கை தமிழர்கட்கு உண்டு எனில் மிகையாகாது.

புதுடில்லியில் எந்த ஆட்சி இருந்தாலென்ன, தமிழ் நாட்டில் எந்த கழகம் ஆட்சிபுரிந்தாலென்ன, நமக்கு இங்கே நெருக்கடிகள் ஏற்படும்போது நமக்காககுரல் கொடுக்கவல்ல நாடு இந்தியா எனும் நம்பிக்கை நமக்கு நிறைய உண்டு. இந்தியா செல்லும்போது நாம் அங்கு கேட்பது எல்லாம் ஒன்றே ஒன்றுதான். ''எமது நாட்டில் எம் மக்களின் மனித உரிமைகள் மறுக்கப்பட்டு, கொடுமைப்படுத்தட்டு, யாருமற்ற அநாதைகளாய் ஆக்கப்படும் வேளைகளில் மனிதாபிமான அடிப்படையில் நமக்கா குரல் கொடுங்கள்'' என்பதுதான் நாம்கோருவது.

யாழ். மாநகரசபை உறுப்பினர் ஜனாப் ஷாகுல் ஹமீட் பேசுகையில் ''தமிழ் மக்கள் இழந்த உரிமைகளை மீண்டும் பெற்று சுயாதீனமாக வாழ வழிவகுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். யாழ்ப்பாணத்தில் தமிழரும் முஸ்லிம்களும் ஒற்றுமையாக வாழ்கிறார்கள் என்று குறிப்பிட்ட அவர், தமிழர் விடுதலைக்கூட்டணி மாநகரசபை அங்கத்தவர்களில் முஸ்லிம்களில் இருவர் இருக்க வேண்டிய இடத்துக்கு மூவரை நியமித்துள்ளது. இது தமிழரும் முஸ்லிம்களும் ஒற்றுமையாக வாழ்வதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும் என்றும்கூறினார், இந்நாட்டில் முஸ்லிம் மக்கள் பொருளாதாரம், குடியேற்றம் போன்றவற்றில் புறக்கணிக்கப்பட்டுவருகிறார்கள் என்றும் ஜனாப் ஷாகுல் ஹமீட் கவலை தெரிவித்தார்.

மாநகரசபை உறுப்பினர் திரு. எஸ். தியாகராசா பேசுகையில், இந்திய நாட்டின் கலை—கலாசாரத்துடன் தொடர்பு கொண்ட எங்களுக்கு இந்திய மக்களுக்கு என்ன துன்பம் நடந்தாலும் இரத்தம் துடிக்கும் நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இந்தியா எங்கள் தாய்நாடு என்பதில் பெருமைப்படுகிறோம்'' என்றார்.

யாழ். மாநகராட்சிமன்ற ஆணையாளர் திரு சி. வி. கே. சிவஞானம் நன்றியுரைநிகழ்த்தினார்.

இவ்வைபவத்தில் தமிழ்க் காங்கிரஸை சேர்ந்த யாழ். மாநகர உறுப்பினர் எவரும் கலந்துகொள்ளவில்லை.

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா, யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் ஆகியோரும், இந்தியத்தூதுவருடன் வந்தபோது யாழ். மாநகர சபைத் தலைவர் திரு. இராசவிசுவநாதன் மாலையிட்டு வரவேற்றார். (சி—மா)

T. V. ஏரியல் அமைப்பில்
முதன்மைமிக்க ஸ்தாபனம்
சென்னை, ரூபவாகினி நிகழ்ச்சிகளை
T V யில் சிரமமின்றி பார்க்க
உத்தரவாதத்துடன் ஏரியல் அமைத்துத் தருவோம்.
நொடிப்பொழுதில், TV ஏரியல்
கோளாறுகளை சரி செய்யலாம்.
எமது பராமரிப்பு சேவை
24 மணி நேரம் செயல்படுகின்றது
சுபநிகழ்ச்சிகளை வீடியோ படக்காட்சியில்
எடுப்பதற்கு
குறைந்த கட்டணம்
பல்வேறு TV செட்டுகளை
பினான்ஸ் வசதியுடன் பெறலாம்.
வீனஸ்
றெக்கோடிங்
றேடியோ வாச் வேக்ஸ்
ஸ்ரீதர் தியேட்டர் முன்,
யாழ்ப்பாணம்.

## "ஆலய வழிபாட்டின் மூலம் இறைஆசி கிட்டுகிறது"

### -- யாழ். ஆயர்

[புலோலி]

''இறைவன் ஆலங்களிலேயே உறைகின்றான். ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு செய்வதன்மூலம் அவனது ஆசீர்வாதத்தை ப்பெறமுடியும். பொதுவழிபாடு செய்வதற்காகவே ஆலயங்களைப் பெரிதாகக் கட்டவேண்டியுள்ளது'' என்று சுமார் 15 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள பருத்தித்துறை புனித தோமையார் ஆலயத்தின் புதிய கட்டிடத்திற்கான அடிக்கல்லை நாட்டிவைத்து உரையாற்றிய யாழ். மறை ஆயர் பேரருட்திரு கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை குறிப்பிட்டார்.

பருத்தித்துறை பங்குத் தந்தை அருட்திரு ரெஜி இராசேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் தொடர்ந்து உரையாற்றிய யாழ்.மறை ஆயர் குறிப்பிட்டதாவது;

',யேசுக்கிறிஸ்துநாதர் மக்களுக்காகப் பலபோதனைகளைப் போதித்துள்ளார். அவரின் போதனைகளைப் பின்பற்றுபவர்கள் கற்பாறைமேற்கட்டப்பட்ட கட்டிடங்களைப் போலவும், சோதனைகளைப் பின்பற்றாதவர்கள் மணல்மேல் கட்டப்பட்ட கட்டிடங்கள் போலவும் பயனடைவர்.''

''நாங்கள்யாவரும் கிறிஸ்துநாதரின் சீடர்கள். அவரின் போதனைகளின்படியே நடக்க வேண்டும். இறைவனில் முழுக்க முழுக்க நம்பிக்கை வைக்க வேண்டும்,''

''ஆலயங்களில் வழிபாடுபாடு செய்வதன்மூலம் எமது தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு இறைவனின் ஆசீர்வாதத்தைப்பெறமுடியும். இறை நம்பகையோடு செயற்படுபவர்களின் வாழ்க்கையில் ஒளி வீசும்.''

பருத்தித்துறை எம். பி. திரு. துரைரத்தினம் உரையாற்றுகையில் ,'ஆலயங்கள் எல்லோருக்கும் பொதுவானவை. அங்கு எதுவித பேதங்களுமில்லை. இவ்வாலயக் கட்டிட அமைப்புக்கென இப்பகுதி மக்கள் ஒரு மாதத்தில் ஒரு நாள் உழைப்பை வழங்கி வருவது பாராட்டப்பட வேண்டியது. மேலும் ஒவ்வொருவரும் தம்மாலியன்ற உதவிகளையும் வழங்க வேண்டும். சிறுவர்கள், பெண்கள், இளைஞர்கள், வயதுலந்தோர், முதியவர்கள் ஆகிய சகலரும் இப்பணியில் பங்கெடுக்க வேண்டும்'' என்றார்.

பங்குச்சபை செயலாளர் திரு. எம். அருளானந்தம், யாழ்.மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர்சங்கப் பொதுச் செயலாளர் திரு. சி. வின்சென்ற்' திரு, வின்செண்டி ரோல் ஆகியோரும் உரையாற்றினர்கள்.

## புதிய கட்டிடம் அமைக்கப்படும்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மகா வித்தியாலயம் புங்குடுதீவு கணேச வித்தியாலயம் அனலைதீவு சதாசிவம் வித்தியாலயம் ஆகியவற்றிற்குப் புதிய கட்டிடங்கள் அமைக்கப்படவிருக்கின்றன. இதற்கான நடவடிக்கைகள் யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## மணிவாக்கு

நூல்கள் வாழாத மாளிகையில் வாழும் மிகமிக தரித்திரத்தரமான பணக்காரர்களுக்காக நாம் இரங்குவோமாக!

— பீச்சா.

# நமது நோக்கு

## எதேச்சாதிகார ஜனநாயகமா அல்லது பரவலான மக்கள் ஆட்சியா?

தேர்தல் ஆண்டில் விதம் விதமான திருவிளையாடல்கள் மக்களை மடையர்களெனக் கருதி ஏமாற்றும் முயற்சிகளில் இடம் பெறுவது இயற்கை.

புரட்சியைப் பற்றியும் பலாத்காரத்தைப் பற்றியும் குறிப்பிடும் பத்திரிகைச் செய்திகள் எவைக்கும் ஆதாரமுண்டாவென்பதை பொதுமக்கள் விழிப்புடன் அவதானிக்க வேண்டும்.

ஆளுங்கட்சியைத் திட்டித் தீர்வதும், அதற்கு முட்டுக்கட்டைபோட முயல்வதும், இதற்கெதிராக அரசு தன்னுடைய சர்வ சாமர்த்தியத்தைப் பயன்படுத்தலும் தேர்தல்வரைக்கும் தொடரும் பிரசாரத்தின் பாங்காகும்.

நாட்டின் இன்றைய நிலையும் அதன் எதிர்காலமும் இந்த முக்கிய கட்டத்தில் அரசியல்வாதிகளுக்கு அக்கறையுடைய விடயமாகத் தோன்றுவதில்லை.

ஐ. தே கட்சியின் சேவை ஜனநாயக கொள்கைக்குட்பட்டதென்று சொல்வது தவறல்ல; பொதுமக்களின் நலனுக்கெடுக்கும் திட்டசட்டங்கள் நன்மையளிக்காமலுமில்லை; ஆனல் அவையெல்லாம் மேலிடத்தில் இருந்து பெறப்படும் உத்தரவிலேயே தங்கியிருக்கின்றன. மக்கள் பங்குகொள்ளும் நடவடிக்கைகளில் அல்ல.

இன்று நாட்டைப் பாதிக்கும் பிரச்சினை, சர்வாதிகாரமா அல்லது ஜனநாயகமா என்பதல்ல; ஆணவங்கொண்ட ஜனநாயகமா அல்லது பரவலாக்கப்பட்ட மக்கள் ஆட்சியா? என்பதே!

கறுப்புப்பண உற்பத்தி, அதனல் பயனடையும் அரசியல்வாதிகள், அரசு அதிகாரிகள், அவர்கள் பெறும் லஞ்சம், மோசடி வியாபாரிகள், கள்ளக்கடத்தல்காரர்கள், கொள்ளைக்காரர்கள் போன்ற சமூக விரோதிகள் மலிந்துகிடக்கும் சமுதாயம், உண்மையான மக்கள் ஆட்சியில் இந்த உச்சநிலைக்கு வந்திருக்காது.

எங்கள் கட்சி, எங்கள் ஆட்சி என்ற கர்வம்— கொழும்பே அகிலஇலங்கையையும் ஆட்டிவைக்கின்றது.

இதற்குப் பரிகாரமாக எழுந்த மாவட்டஅபிவிருத்திச்சபை; அதற்குப் பக்கபலமான பிரதேசசபை; அதற்கு ஆதாரமான கிராமோதயசபை – இவை யாவும் செவ்வனே இயங்கியிருந்தால் இன்று நாட்டுப்புறங்களில் கிராமங்களில் வாழும் மக்கள், இந்த ஆட்சியென்பதையும் தாங்கள் சுதந்திர புருஷர்கள் என்பதையும் உணர்வார்கள். தங்கள் தங்கள் மாநிலத்தில் பக்தி உண்டானல், அது தேசபக்திஎன்றே சொல்லவேண்டும்.

யாழ்ப்பாண மாவட்டத்தையே கருத்திற் கொண்டால், ஒரு வருடமாகியும், அது ஒரு மினி பாராளுமன்றம் என்றும், அந்த மாவட்டத்துக்கு ஒரு ஜனதிபதி, ஒரு பிரதம மந்திரி உண்டென்றும் பாசாங்கு பண்ணப்பட்டதொழிய, துரிதமான அபிவிருத்தி வேலைகள்; அவைமூலம் மக்கள் எழுச்சி– இவற்றின் அடையாளங்களே இன்னும் தென்படவில்லை.

சுதந்திர இலங்கையில் கிராம முன்னேற்றத் திட்டங்கள் அமுல் படுத்தப்படவில்லையென்று நாம் சொல்லவில்லை. அவையெல்லாம் ஒரு கண்துடைப்பானவகையில் எழுந்தன; கிராமத் தலைவர்களை உருவாக்கி, அவர்களின் தியாக உணர்வால் மக்கள் உந்தப்பட்டு கிராமத்தில் பலதிறப்பட்ட உயிர்நிலையங்கள் செழித்தோங்கவில்லையென்பதே எமது கருத்து

இவற்றிற்கெதிராக, ஒரு பாரிய திட்டமென்று கருதப்பட்ட மாவட்ட அபிவிருத்தி சபையின் சாதனைகள் இந்தக் கால எல்லையில் ஒரு கணிசமான மாற்றத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

மாவட்ட சபைக்கு போதிய அதிகாரங்கள் இருக்குமாயின், மக்கள் ஆட்சி பரந்து பொலிவதற்கு வழிபிறக்கும்; பிரதேச சபைகள், கிராமோதய சபைகள் கிராமங்களில் வேரூன்றும்; கிராமத்தின் றேட்டுக்கள், குளங்கள், கமங்கள், தோட்டங்கள், பாடசாலைகள், போக்குவரத்து வசதிகள், கைத்தொழில், வர்த்தகம் முதலியன மக்கள் ஆர்வத்தால் முன்னேறும்.

உலகில் எங்கும் காணமுடியாத மாவட்ட மந்திரிப் பதவி, ஜனதிபதியின் நேரடித் தலையீடு அல்லது அவரின் அனுமதிகோர வேண்டிய நிபந்தனைகள். மாவட்டசபையின் பூரண பொறுப்பு வாய்ந்த அதிகாரத்துக்கு தடையாக உள்ளன.

மக்கள் ஆட்சி, நாட்டில் வாழும் மக்கள் கையிலிருந்துஉதயமாக வேண்டும். மாவட்டமோ, மாநிலமோ தனது சொந்தக்காலில் நிற்கும் பலம்பெற வேண்டும் இது காலமெடுத்தாலும் இன்று தொடங்கியிருக்கவேண்டும்.

மாவட்டசபைத் தலைவரே நிருவாகக் குழுவுக்கும் தலைவராக இருக்க வேண்டியது அவசியம்; சுய நிர்ணயமென்பதின் அர்த்தம் வேறெதில் தங்கியிருக்கின்றது?

கிராமோதய சபையில், தொடங்கி, பிரதேச சபையில் உறுதிபெற்று மாவட்ட சபையின் விவாதத்துக்கு வருகின்ற விடயங்கள்– விவசாயம், காணி அபிவிருத்தி, கால்நடை வளர்ப்பு போன்ற அனைத்தும் உருவாக்கும். அபிவிருத்தித் திட்டத்தையும், வரவு செலவுத் திட்டத்தையும் அங்கீகரிக்கும் பெரும்பொறுப்பு மாவட்ட சபைக்கே உரியதாகும்; உள்ளூராட்சி மந்திரியின் அங்கீகாரம் பெயரளவிலே தானிருக்கவேண்டும்.

இவ்வகையில் துரிதப்படும் மாவட்ட ஆட்சியே, காலகதியில் தமிழ் மக்களின் சுயாட்சியையோ அல்லது தனிநாட்டையோ உருவாக்க வல்லது, தேசபக்தியுடன் இன ஒற்றுமையுடனும், நடைபெறும் பரவலாக்கப்பட்ட மக்கள் ஆட்சி தேசியப்பிரச்னைகளுக்கு தீர்வு காணவல்லது.

---

“சுதந்திர நாடமைக்கும் முயற்சியில்

# உலகத் தமிழர்களுக்கு நாமே முன்னேடிகள்”

### – எதிர்க்கட்சி முதல்வர் ‘அமிர்’

(யாழ்ப்பாணம்)

“இலங்கையின் மொத்த சனத்தொகையில் தமிழர்கள் 27 வீதமானேர். இந்தியாவில் ஏறத்தாழ மொத்த சனத்தொகையில் 8 வீதமானேரே தமிழர்கள். அதுமட்டுமின்றி உணர்ச்சியினுல், உத்வேகத்தினுல் உலகில் பரந்துபட்டு வாழும் தமிழனுக்குச் சுதந்திர நாடு அமைக்கும் முயற்சியிலும் நாமே முன்னேடிகள். எனவே இத்துணை கிறப்புமிக்க எமது மண்ணிலே கவிஞர்களின் கவிதைத் தொகுப்பு நூலை வெளியிடுவது சாலப் பொருத்தமானது.”

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர்நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று முன்தினமிரவு “செம்மாங்கனி” கவிதைத் தொகுப்பு நூலை யாழ். வீரசிங்கம் மண்டபத்திலே வெளியிட்டுவைத்து உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார். தொடர்ந்து உரையாற்றுகையில் அவர் குறிப்பிட்டதாவது:

“தமிழன் எங்கு வாழ்ந்தாலும் தொன்றுதொட்டு வழங்கும் தமது மொழியின் பாரம்பரியத்தை மறவாது வாழ்ந்து வருகிருன். வாழுமிடமெல்லாம் தம்மால் முடிந்தவரை தமிழ்மணம் கமழச்செய்வதில் தவறுவதில்லை. தமிழ் நாடாயினும் சரி, இலங்கை, சிங்கை, மலேஷியா ஆயினும் சரி, மேற்குஐரோப்பிய நாடுகளாயினும் சரி தமிழ்ச் சங்கங்களை அமைத்துதமிழின் பெருமையைநிலைநாட்டும் முயற்சியை அவன் கைவிடவில்லை.

மொழியின் பெருமை பழைமையில் மட்டும் தங்கியிருக்கவில்லை. புதிது புதிதாகத் தோன்றுகின்ற இலக்கியங்களின் சிறப்பிலே தாம் தாங்யுள்ளது. புதிய இலக்கியப் படைப்புகள் உலகின் கவனத்தைக் கவரும்நிலை இன்னமும் முழுதாக ஏற்படவில்லை ‘பைபிள்’ வேதநூலுக்கு அடுத்தபடியாகப் பலமொழிகளில் பெயர்க்கப்பட்ட பெருமை திருக்குறளுக்கு உண்டு. இப்போது தான் மகாகவி பாரதியின் பெருமை பல நாடுகளுக்குக் தெரிகிறது. இன்னும் சில நாடுகள் அவரைப்பற்றி அறிய முற்படுகின்றன. தமிழ் மக்களின் இலக்கியப் படைப்புக்களை ஒருங்கே சேர்த்து வெளியிடுதல் அரிது. எனினும் முன்னேடியாக இளம் கவிஞர் ‘அழகாபுரி அழகுதாசன்’ உலகத் தமிழ்க் கவிஞர்களின் கவிதைத் தொகுப்பு நூலை வெளியிட்டுள்ளமை பாராட்டுதற்குரியதாகும்.

### சங்ககாலம் தொடக்கம்....

“தொகுப்பு நூல்கள் வெளியிடும் மரபு சங்ககாலம் தொடக்கம் இருந்துவருகிறது. ‘பத்துப்பாட்டு’, ‘எட்டுத் தொகை’, ‘பதினென் கீழ்க்கணக்கு’ இவ்வயாவும் தொகுப்பு நூல்களே. ‘புறநானூறு’, ‘அகநானூறு’ என்பன தனி ஒருபுலவனின் படைப்பல்ல. ஈழத்துப் புலவரின் படைப்புகள் தமிழ்நாட்டில் தொகுத்தளிக்கப்படுவது சங்ககாலத்திலும் இருந்த வழக்கமே ஈழத்துப் பூதந்தேவனர் போன்றேரின் படைப்புக்கள் அப்போதே இடம்பெற்றதுண்டு. இடைக்காலத்தில் தொடர்பு குன்றிவிட்டது. தற்போதைய நிலைமையில் கணிசமான அளவு முன்னேற்றம் காணப்படுகிறது. ஈழத்துப் புலவரின் படைப்புக்களுடன் மலேஷியா தமிழ்நாடு, பீஜி, சிங்கப்பூர் உட்படப் பல நாடுகளையும் சேர்ந்த தமிழ்க் கவிஞர்களின் கவிதைகளும் இணைந்த தொகுப்பு நூலான ‘செம்மாங்கனி’ வெளியிட்ட இளம் கவிஞருக்கு ஈழத் தமிழ் மக்கள் சார்பில் நன்றி சொல்லக் கடமைப்பட்டவராவோம்.

“கனிகள் சாதாரணமாக நாவினில் இனிப்பவை. மகாகவி பாரதிக்கோ தேனைச் செவியில் இனிக்கச் செய்தன. அவ்வாறே ‘செம்மாங்கனியும்’ செவிகளில் இனிக்கும் மாங்கனியாக, உள்ளத்தில் தித்திக்கும் கனியாக விளங்குமென்றுர்.

இவ்வெளியீட்டு விழாவில் யாழ்ப்பாணம் எம். பி. திரு வெ. யோகேஸ்வரன் வரவேற்புரை நிகழ்த்தினர். திரு கங்கைவேணியன் கோப்பாய் எம். பி. திரு எம். ஆலாலசுந்தரம் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்தினர்.

எதிர்க்கட்சி முதல்வர் திரு அ. அமிர்தலிங்கம், கவிஞர் அழகாபுரி அழகுதாசனுக்கு ‘சமதர்மக் கவிஞர்’ என்றபட்டத்தை வழங்கிப் பாராட்டுத் தெரிவித்தார்.

தொழிலதிபர் திரு. க. கனகராசா, சமதர்மக்கவிஞருக்குப் பொன்னுடை போர்த்தி கௌரவித்து, எதிர்க்கட்சி முதல்வரிடமிருந்து முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார், இரண்டாவது பிரதியையாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினர் திரு எஸ். தியாகராசா பெற்றுக்கொண்டார்.

கவிஞர் அழகுதாசன் தமக்களிக்கப்பட்ட பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில், ‘தமிழினத்தின் ஒற்றுமையை வலியுறுத்தும் நோக்கமாகவே, உலகெல்லாம்பரந்து வாழும் தமிழ்க் கவிஞர்களின் கவிதை நூல் தொகுப்பொன்றை வெளியிட்டுள்ளதாகவும், வெகு விரைவில் இரண்டாம் பதிப்பாக 1000 பக்கங்களில் உலகத் தமிழ்க் கவிஞர்களின் தொகுப்பு நூல் ஒன்றை வெளியிடவுள்ளதாகவும் அதில் ஈழத்தில் தலைசிறந்த கவிஞர்களின் படைப்புக்கள் இடம் பெறச் செய்வதாகவும் தெரிவித்தார். (சி–மா

---

## ஞானபண்டிதாவுக்கு வயது அறுபது

இறையோடு இசைந்த இன்பத்தையும், இன்போடு இசைந்த வாழ்வையும் பெறுவிக்கும் கல்வியைத் தரும் பள்ளியொன்று தேவை என்ற திருவருள் சிந்தையால் புலவர் ஐயாவினுல் தோற்றுவிக்கப்பட்ட ‘ஞானபண்டி’தாவுக்கு அறுபது வயதாகிவிட்ட பெருமையால் நாம் குதூகலிக்கின்றேம்.

ஸ்ரீ ஞானபண்டித வித்தியாலயம் கொக்குவில் மேற்கெல்லையில் எமது மக்களுடைய இளம் தலைமுறையினருடைய கல்வி, கலை, கலாச்சாரம், சமயம் என்றின்னேரன்ன பாரம்பரியத்தைப்பாதுகாத்து வளர்க்கவேண்டுமென்ற குறிக்கோளுடன் புலவர் ஐயா உருவாக்கிய அறிவுப் பெட்டகம். இவ்வித்தியாலயத்தில் சிறப்பாக அமைந்திருக்கும் ஞானவைரவமூர்த்தி ஆலயம், மாணவர்கள் சமய நெறி நின்று பயில்வதற்கேற்ற சூழ்நிலையை உருவாக்கவேண்டுமென்ற வித்தியாலய தபாகரது எண்ணத்தை நிறைவு செய்கின்றது.

1922ல் கொக்குவில் விளங்கவந்த புலவர் ஜீயா த. குமாரசாமிப்பிள்ளையால் சொந்தச் செலவில் தாபிக்கப்பெற்று, சேர் பொன். இராமநாதனின் அனுசரணையோடு அரசாங்கப் பாடசாலை அந்தஸ்தை அடைந்தது. “ஞானப்ண்டிதா”வின் அளப்பரிய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த பெரியார்களையும், பெருவள்ளல்களையும் இச்சந்தர்ப்பத்தில் நினைவுகூருதலும், இப்பாடசாலையின் வளர்ச்சியில் அயராது உழைக்கும் பாடசாலை முதல்வரின் பணியும், மாணவர் பங்களிப்பும் பற்றிச் சிந்தித்தலும் பொருத்தமானதாகும். சிறிய அமைப்புடன் அமைந்திருந்த இவ்வித்தியாலயத்திற்கான நிரந்தரக் கட்டட அமைப்பிற்குக் காரணர்களாக எம்மூர்ப் பெருமகன் திரு. த. நீதிராசா ஜே. பி. அமைந்ததை கொக்குவில் கிராம மக்கள் ஒன்றிணைந்து நினைவுகூருவார்கள். இவ்வாறே வர்த்தகப் பிரமுகர் திரு சி. சின்னத்துரை, சிவதர்ம வள்ளல் திரு. க. கனகராசா, திரு. என் எஸ். தெய்வேந்திரம் ஊரவர்கள் ஆகியோரும் ஞானபண்டிதாவின் வளர்ச்சிக்கு என்றும் பக்கபலம் நின்றேராவர்,

கொக்குவில் ஞான பண்டிதாவில் போட்டிகளுக்கும், விழாக்களுக்கும் குறைவேயில்லை. போட்டிகள் மூலம்தான் மாணவரது அறிவு, திறன், மனப்பாங்கை ஊக்குவித்து வித்தியாலய தரத்தை முன்னேற்ற முடியும் என்ற உண்மை ஞானபண்டிதாவில் உணரப்பட்டது

இக் கல்லூரியின் வளர்ச்சி சிறப்பாக பெற்றேர், சக ஆசிரியர்களின் மனப்பூர்வமான ஒத்துழைப்புடன் அதிபர் திரு. த. தருமலிங்கம் செய்த, இனிச் செய்யப்போகின்ற முயற்சிகளில் தங்கியிருந்திருக்ன்றது.

‘கொக்குவில்’ இலங்கையிலே இருக்கும் கிராமங்களில் மிகப்பெரிய பரப்பையுடைய ஒரு கிராமம். இத்தகைய பெரிய பதியிலே கல்விமான்க

(8–ம் பக்கம் பார்க்க)

---

## அராலி முருகன் வருடாந்தஉற்சவம்

[யாழ்ப்பாணம்]

அராலி வடக்கு மயிலியற்புலம் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் இம் மாதம் 28ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

அடுத்தமாதம் 7ம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும், 9ம் திகதி பூங்காவனமும் நடைபெறும்.

காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை

# 3-ம் கட்டப்பிரிவில் மேலும் 2000 பேருக்குவேலைவாய்ப்பு!

## குறைபாடுகளும் நீக்கப்படுமாம்

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை 3ம் கட்டப் பிரிவில் கடமையாற்றும் கிராம அபிவிருத்திச் சங்கத் தொழிலாளர்களது பல்வேறு குறைபாடுகளும் நிவர்த்தி செய்யப்படும் என 3ம் கட்டப்பிரிவின் திட்ட முகாமையாளர் திரு. ஜெயமானே உறுதியளித்துள்ளார்.

கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சார்பில் மேலும் தொழிலாளர்களை வேலைக்குச் சேர்ப்பது பற்றி ஆராய மேற்படி 3ம் கட்டப் பிரிவில் இடம் பெற்ற ஆலோசனைக் கூட்டமொன்றிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் ஊறணி, பலாலி, வுதிரி ஆகிய சங்கங்களின் தலைவர்களும், திட்ட அமுலாக்கல் பொறியியலாளர் திரு. தேவரத்தினம், உதவியாளர் திரு சபாரத்தினம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஊறணிக் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. ம. மரியாம்பிள்ளை சங்கத்தின் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளையும், குறைபாடுகளையும் எடுத்து விளக்கினார்.

3ம் கட்டப் பிரிவு திட்ட முகாமையாளர் திரு. ஜெயமானே இது குறித்து தெரிவிக்கையில் கூறியதாவது:-

3ம் கட்ட வேலைப் பிரிவில் இன்னும் 6மாதங்களுக்கு 2000 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு இருக்கிறது. கிராம அபிவிருத்திச் சங்கம் மூலம் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு அவர்களது தகுதி அடிப்படையில் நிரந்தர நியமனம் வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

''வேலை வங்கிமூலம் சேர்க்கப்பட்ட தொழிலாளர்களுக்கும், சங்கத் தொழிலாளர்களுக்குமிடையில் உள்ள சம்பளக் கொடுப்பனவு முரண்பாடு எதிர்வரும் 1ம் திகதியிலிருந்து நீக்கப்படும். சங்கத் தொழிலாளர்களிடமிருந்து கழிக்கப்படும் வரியை நீக்கவும், விசேஷ படி வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்படும்'' என்றார். (அ)

# பனம் தும்பு ஏற்றுமதிக்கு ஊக்குவிப்பு உதவித்திட்டம்

(புலோலி)

இலங்கையில் பனை வளரும் பிரதேசங்களிலிருந்து பிறநாடுகளுக்குப் பனந்தும்பு ஏற்றுமதியை ஊக்குவிக்கும் பொருட்டு பனம்பொருள் அபிவிருத்திச்சபை உதவித் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ்உற்பத்தியாளர்களுக்கு இயந்திர சாதன வசதிகளை மானிய அடிப்படையில் வழங்கவும்உற்பத்தியாக்கப்படும் தும்புக்கு விற்பனை, ஏற்றுமதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் பனம்பொருள் அபிவிருத்தச் சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது.

பனந்தும்பு உற்பத்திமுயற்சியில் ஈடுபடும் தனிப்பட்டவர்களோ, கூட்டுறவுச் சங்கமோ, அமைப்புக்களோ பனம் பொருள் அபிவிருத்திச் சபையுடன் தொடர்பு கொள்ளலாமென்று அதன் தலைவர் திரு. கே. நடராசா அறிவித்துள்ளார்.

''பனைவளஅபிவிருத்திமூலம்

# சீவல் தொழிலாளரின் வாழ்வும் மேம்பாடுறும்''

(புலோலி)

''இலங்கையின் பொருளாதாரத்தில் இன்று பனை வளமும் முக்கிய இடம் பெற்றுள்ளது. பனைவள அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்போது சீவல் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரமும் உயர்வடைய வழியேற்படும்''

இவ்வாறு இலங்கைப் பனம் பொருள் அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. கே. நடராசா பருத்தித்துறை - புலோலி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தில் சுமார் நாலு லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட பனஞ்சீனித் தொழிற்சாலையைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார். சங்கத்தலைவர் திரு கே. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் தொடர்ந்து உரையாற்றிய திரு நடராசா குறிப்பிட்டதாவது:

பனையின் பயனை அண்மைக் காலத்திலிருந்துதான் எம்மவர்கள் சிறப்பாக உணரத் தொடங்கியுள்ளார்கள். வெளிநாட்டவர்கள் பெருமளவுக்குப் பனம் பொருள்களை விரும்பி வாங்க முன் வந்திருப்பது எமக்குப் பெருமை அளிக்கின்றது.

''பனஞ்சீனித் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் சீனி எமது பகுதியின் பொருளாதாரத்தை மேம்படுத்தும். இத்தொழிற்சாலையை அபிவிருத்தியடையச் செய்து இப்பகுதியின் பொருளாதாரத்தை மேம்படுத்துவது இப்பகுதி மக்களின் கையிலேயே தங்கியுள்ளது''. (அ)

# ஒரே குடும்பத்தில் ஐவர் தாக்குதலில் படுகாயம்

(மாவி - கோண்டாவில்)

வடிசாராயம்விற்றதை காட்டிக் கொடுத்தார்களாம். இதனால்ஏற்பட்ட தகராறு காரணமாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் தாக்குதலுக்குள்ளாகினர்.

கோண்டாவில் வடக்கில்இச் சம்பவம் இடம் பெற்றது

இத்தாக்குதல் சம்பவத்தில் கணபதி, இராசரத்தினம், நாகம்மா, சாந்தி, வசந்தி ஆகியோர் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கத்தி, பொல்லு மற்றும் பயங்கர ஆயுதங்களுடன் வந்தவர்கள் இவர்களைத் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

பெண் ஒருவர் வடிசாராயம் விற்றது தொடர்பாகக் கைதாகி மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் அபராதம் விதிக்கப்பட்டதாகவும், இதனைத் தொடர்ந்து இப் பெண்ணின் குடும்பத்திற்கும வேறு சிலருக்குமிடையில் தகராறு மூண்டு தாக்குதல் இடம் பெற்றதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சுன்னாகம்பொலிஸ் பொறுப்பதிகாரி திரு பொன். சுகுணேந்திரன், சப் இன்ஸ்பெக்டர் திரு சிவராசா, கான்ஸ்டபிள் கந்தசாமி ஆகியோர் இது குறித்து விசாரணை செய்து சிவரத்தினம், செல்வரத்தினம் அரசரத்தினம் ஆகிய சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர். விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. (அ)

# மின்பகுதி ஊழியர்போதாததால் கிளிநொச்சி அடிக்கடி இருளில்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரம் அடிக்கடி இருளில் மூழ்கி வருகிறது இதனால் இப்பகுதி வர்த்தகர்களும் பொதுமக்களும் மிகுந்த சிரமமடைந்து வருகின்றனர். இக்குறைபாடுகள் தொடர்பாக கிளிநொச்சி உள்ளூராட்சி திணைக்கள மின் அதிகாரி திரு. எஸ். மரியாம்பிள்ளையிடம் நமது நருபர் தொடர்பு கொண்டபோது கிளிநெச்சி மாவட்ட அபிவிருத்திசபை உப அலுவலத்தில் போதியளவு மின்சார உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் இல்லாமல் இருப்பதால் பழுதடையும் மின்உதிரிப்பாகங்களை திருத்துவதில் சிரமம் ஏற்படுவதாகவும் சில வேளை உயர் அதிகாரிகளே மின்சாரக்கோளாறுகளை சீர் செய்யவேண்டிய நிலைமையுள்ளதாகவும் ஊழியர் பற்றுக்குறை நிவர்த்தி செய்யப்படும் பட்சத்தில் நிலைமை சீரடையும் என்றும் திரு. மரியாம்பிள்ளை தெரிவித்தார். [அ]

# ரூ. 35 ஆயிரம் ஒதுக்கீடு

(புலோலி)

பொலிகண்டி திக்கம் வீதியிலுள்ள அரசடிமதகு தொடர் வேலைக்காகப் பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் 35,000 ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். (இ)

# ரூபா 25,000 நன்கொடை வழங்க உறுதி

புலோலி)

பருத்தித்துறை ஸ்ரீ இராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் பிரார்த்தனை மண்டப அமைப்புக்கென 25,000 ரூபா பெறுமதியான கட்டிடப் பொருட்களைத் தருவதாக வட பிரதேச ஐக்கிய தேசியக் கட்சிப் பிரதம அமைப்பாளர் திரு கே. கணேசலிங்கம் உறுதியளித்துள்ளார்.

திரு. கணேசலிங்கம்பிரார்த்தனை மண்டப அமைப்புவேலைகளைப் பார்வையிட்டபின் சுவாமி சித்ரூபானந்தாவிடம் மேற்படி நிதியுதவிபற்றி உறுதியளித்தார். (அ)

# பத்தாவது ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜ 10-வது ஆண்டுவிழா ஜூலை மாதம் 11ம் திகதி நடைபெறவிருக்கிறது.

கடந்தபுதன் இவ்விழா நடைபெறுவதாக ஒழுங்கு, செய்யப் பட்டிருந்ததாயினும் அந்தந்தப் பகுதி சங்கங்களினால் கொண்டாடப்பட்டு வரும் 10வது ஆண்டுவிழா முடிவுபெறுமையால், விழாவை ஒத்தி வைக்க வேண்டியேற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

# ஜெபஆலய அமைதி மாநாடு

[கிளிநொச்சி]

கிளிநொச்சி கிருஷ்ணபுரத்தில் அமைந்துள்ள கிறிஷ்தவ ஜெப ஆலயத்தில் இம்மாதம் 28ம், 29ம், 30ம்திகதிகளில் மனிதகுல அமைதி மகாநாடும் வழிபாடும் நடைபெறவுள்ளது இவ் ஆலய இயக்குநர் வண. பிதா எஸ். ஜோன் தலைமையில் நடைபெறவுள்ள இம் மாநாட்டில் வண பிதா என். கிளட்சன் பிரதம அதிதியாகக்கலந்து கொள்வார். [அ]

உங்கள் வீட்டிற்குத் தேவையான
பாவனைப்பொருட்களை
தவணைமுறையில்
சுலபமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

- தொலைக்காட்சி (T. V.) பெட்டிகள்
- மின் விசிறிகள்
- நீர் இறைக்கும் இயந்திரங்கள்
- துவிச்சக்கர வண்டிகள்

மற்றும் உங்களுக்குத் தேவையான பொருட்கள்!

மங்கள வைபவங்கள் வீடியோ படப்பிடிப்புச் செய்துகொடுக்கப்படும்

தொடர்புகொள்ளவும்:
முகாமையாளர்
TFC
த பினான்ஸ் கம்பனி லிமிட்டெட்;
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். போன்: 7680

இலங்கையின் தலைசிறந்த
மின்சார பல்புகள்
CBE பல்புகள்
வட இலங்கையின் பிரதம விநியோகஸ்தர்களாக நாம்
நியமனம்பெற்றுள்ளோம். சகல வியாபாரிகளும்
எம்முடன் தொடர்புகொண்டு தேவைகளை பெற்றுக்கொள்ளுங்கள்.
கம்பனி விலைகளுக்கமைய விசேட கழிவு.
மின்சார உபகரணங்களின்
மொத்த, சில்லறை வியாபாரிகள்
நியுரோன் எலெக்றிக்கல்ஸ்
141 - 143 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
போன்; 7016

“ஆங்கிலம் அவசியம் தான் ஆனுல்.....

# ஆங்கில கலாசாரத்துக்கு நாம் அடிமையாகக்கூடாது”

## பேராசிரியர் சிவஞானசுந்தரம் கூறுகிருர்

(யாழ்ப்பாணம்)

“நாம் ஆங்கிலத்தைக் கற்க வேண்டும். ஆனுல் ஆங்கிலேய கலாசாரத்துக்கு அடிமையாகக் கூடாது. ஆங்கிலத்தைகற்றுப் பயனடைந்தாலும் தமிழராகவே வாழவேண்டும்.”

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தின் வருடாந்த இராப்போசனவிருந்து வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட பேராசிரியர் சி. சிவஞானசுந்தரம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பேராசிரியர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

மாணவர்கள் ஒரு குறிக்கோளை முன்வைத்துக்கல்வி கற்கவேண்டும். ஆங்கலம்உலகளாவியஒரு மொழிஅதனைக்கற்பதன்மூலம் தொழில் அறிவை விருத்திசெய்து வெளிநாடுகளில் வேலைவாய்ப்புக்களைப் பெறலாம்.

இல்வைபவத்தில் மகாஜனக் கல்லூரி அதிபர் திரு. பொ. சோமசுந்தரம் உயர்தர மாணவர் மன்றத்தலைவர் செல்வன் மு. பிரேம்நவாஸ் ஆகியோரும் உரையாற்றினர்.

பேராசிரியர் சிவஞானசிந்தரம் [நந்தி] தாம் எழுதிய சில நூல்களை இவ்வைபவத்தில் கல்லூரி நூலகத்துக்கு அன்பளிப்பாக வழங்கினுர். [கி]

“கற்கோவளம் பகுதியில் மணல் ஏற்றுவதைத் தடைசெய்க”

[கரவெட்டி]

வராத்துப்பளை, கற்கோவளம் போன்ற கிராமங்கள் கடலினுள் மூழ்கக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளபடியால் வல்விபுரக் கடற்கரைப் பிரதேசத்தில் சட்டவிரோதமாகக் கடற்கரை மணல் ஏற்றப்படுவது உடனடியாகத் தடுக்கப்படவேண்டுமென்று புலோலி கிழக்கு தும்பளை கிராமோதய சபைக் கூட்டத்தில் வராத்துப்பளை இளைஞர் நன்னெறிக் கழகத் தலைவர் திரு. ஏ. என். எஸ். திருச்செல்வத்தால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. சபைத்தலைவர் திரு. கோ. குமாரவேலு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்களாவன:

‘வராத்துப்பளை – உத்திராவத்தை வீதி, கற்கோவளம்–முதலாம்கட்டை வீதியில் உள்ள குறைவேலைகள் பூர்த்தி செய்யப்படவேண்டும்’’

தேவையற்ற முறையில் பனை மரங்கள் தறிக்கப்பட்டு அழிக்கப்படுவது தடைசெய்யப்படவேண்டும்.

பனை மூலவள அபிவிருத்தி நடவடிக்கைகளை பனம் பொருள் அபிவிருத்தி சபையின் உதவியுடன் மேற்கொள்ள வேண்டும்.

புலோலி கிழக்குப் பகுதியில் உப–தபால் நிலையம் ஒன்று அமைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

சபைப் பகுதிக்குள் மலசல கூடம் அமைப்பவர்களுக்குக் கடன்உதவி பெற்றுக்கொடுக்க ஆவன செய்யவேண்டும்.

வராத்துப்பளை சந்தாதோட்டம், கற்கோவளம் பகுதிகளுக்குத் தெரு மின்விளக்குகளைப் பொருத்துவதற்கேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபை புலோலி உப–அலுவலகத்தைக் கோருதல்,

புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கத்தோலிக்க சமயம், தையல் ஆகியனவற்றைக் கற்பிக்க ஆசிரியர்களைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். [அ]

# வீட்டுக்காரரை கட்டிவைத்து செத்தல்மிளகாய் கொள்ளை!

## நால்வரில் இருவர் அடையாளம் காணப்பட்டனர்

[வவனியா]

செத்தல் மிளகாய் கொள்ளை வழக்கில் நான்கு சந்தேக நபர்களில் இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

82 ஜூன் 8ம் தேதி கூமாங்குளத்தில் ஆறுமுகம் என்பவருடைய வீட்டில் புகுந்த4 பேர் அவரைப் பயமுறுத்திக் கட்டி வைத்துவிட்டு அங்கிருந்தசெத்தல் மிளகாய் சாக்குகளைக் கொள்ளையடித்துச் சென்றதாகப் புகார் செய்யப்பட்டிருந்தது.

வவனியா பொலிசார் இச் சம்பவம் தொடர்பாக 4 சந்தேக நபர்களைக் கைது செய்தனர்.

சந்தேகநபர்கள் வவனியா மாவட்ட நீதிமன்றத்திஞல் பதில் நீதிபதி திரு. றெஜிஞேல் முன்னிலையில் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

சாட்சி ஆறுமுகம் சந்தேக நபர்களில் சுப்பிரமணியம், இராசு ஆகிய இருவரை அடையாளம் காட்டினுர், மற்ற இருவரும் அடையாளம் காணப்படவில்லை. [இ]

### நயினையில் வழமை போல் அன்னதானம்

(யாழ்ப்பாணம்)

நயினுதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் தேவஸ்தானதிருவிழா இவ்வருடம் ஒத்திவைக்கப்பட்டுள்ள போதிலும்கொடியேற்ற தினமாகிய நேற்று அன்னதானம் வழங்கப்பட்டது வழமைபோல் 7ம் திருவிழா தினமாகிய 28 ம் திகதிமுதல் தேற்போற்சவம் வரை அம்பிகையைத்தரிசிக்கவரும் அடியார்களுக்குப் பகல் அன்னதானம் அமுதசுரபி மண்டபத்தில் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுளளது. எனினும் பணம் பொருள் சேகரிப்பதற்கு எவரையும் நியமிக்கவில்லை என்று அமுதசுரபி அன்னதான சபை செயலாளர் தெரிவித்துள்ளார். [இ]

### மாணிக்கவாசகர் குருபூசை

(சரவணை)

சரவணை “தேவிபுரம்” ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் இம்மாதம் 25–ம் திகதி ஸ்ரீ மாணிக்கவாசகர் குருபூசைதினம் அனுஷ்டிக்கப் படவிருக்கிறது.

பகல் விசேடபூஷை, அபிஷேகம், அன்னதானம் என்பன நடைபெறவுள்ளன. [மா]

### “2கி.சே.அலு லர் பிரிவுகளை இணைக்கவும்”

(புலோலி)

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவுடன் இணைந்துள்ள புலோலி மேற்கு கிராமசேவை அலுவலர் பிரிவு பருத்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுடன் இணைக்கப்படவேண்டுமென்று புலோலி மேற்கு கிராமோதய சபைக்கூட்டத்தில் புலோலி மேற்கு நாவலர் சனசமூக நிலையத்தலைவர் திரு பொ. திருச்செல்வத்தால்(உதவித்தபாலதிபர்) கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

சபைத்தலைவி திருமதி. மகேஸ்வரி பாலகிருஸ்ணன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்களாவன!

புலோலி மேற்குப்பகுதியில் பலவிவசாயிகக் வாழ்வதற்சாகவும் இவ்விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கும், பொருட்களை வாங்குவதற்கும் ஒரு நாளைக்குப் பல தடவை பருத்தித்துறை நகருக்குச் செல்ல வேண்டியிருப்பதாகவும், செல்லும்வேளைகள் எல்லாம் பருத்தித்துறை நகரசபையினுல் அமைக்கப்பட்டுள்ள புதிய சைக்கில் பாதுகாப்புநிலையத்திற்குப் பணம் செலுத்தமுடியாதிருப்பதனுல் ஒரு நாளைகு ஒரு தடவை பணம் செலுத்தினுல் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் எத்தனை தடவையும் சைக்கிளை விடுவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதென பருத்தித்துறை நகரசபையைக் கோருதல்

“புலோலிமேற்கில்அமைந்திருக்கும் சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தையும் புலோலி மேற்குகிராமோதயசபையில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.”

### எதிர்காலச் சந்ததி சிறப்புற....

(கரவெட்டி)

“பெற்ருேர் ஆசிரியர்கள். மாணவர்கள் ஆகியோர் ஒருங்கிணைந்து செயற்படும்போது தான் பாடசாலைகளின் அபிவிருத்திகளை மேம்படுத்திஎதிர்காலச் சந்ததியினரைச் சிறப்பாக வாழ வழிவகுக்கமுடியும்” என்று பருத்தித்துறை புலோலி வேலாயுதம் மகாவித்தியாலய பாடசாலை அபிவிருத்திச்சபைப் பொதுக்கூட்டத்திற்குத் தலைமைவகித்து உரையாற்றிய வித்தியாலய அதிபர் திரு. வி. சே. ஏகாம்பரநாதன் குறிப்பிட்டார்.

அக்கூட்டத்தில் புதிய நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது. தலைவர்: திரு. வி.சே. ஏகாம்பரநாதன். (அதிபர்), உப தலைவர்: திரு. மு.பொ.வீரவாகு, இணைச்செயலாளர்கள்: சட்டத்தரணி வி.கே. கணபதிப்பிள்ளை, திரு ஏ. என். எஸ். திருச்செல்வம், பொருளாளர்; திரு. வி. வி. நவரத்தினம். [அ]

### மதில் கட்ட ஏற்பாடு

(சரவணை]

புங்குடுதீவு மணற்காடு மயானத்தைச் சுற்றி மதில் கட்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. புங்குடுதீவு ‘மணற்காடு’ மயான பரிபாலன சபை இதற்காக பல ஆயிரக்கணக்கான ரூபாவைச் சேகரித்துள்ளது. விரைவில் இவ் வேலைகள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன. [மா]


27%

இலங்கையில் இரண்டாவதாக ஆரம்பமான பினுன்ஸ் கம்பனி. ஸ்தாபிதம்: மே 1940-ம் ஆண்டு

இயக்குநர்கள்

திரு. ஜே. எல். பி. கொத்தலாவெல, ஏ. எம். எக்ஸ. லண்டன் (தலைவர், நிர்வாக இயக்குநர்)
திரு. பி. டி. விசுவாசம் எவ். சி. ஏ. (நிதி இயக்குநர்)
சட்டத்தரணி திருமதி பி. கே. கருணநாயக்கா (பொது முகாமையாளர்)
திருமதி என். மடவெல (காரியதரிசி)
திரு. டி. ஆர் சேனநாயக்கா ஏ. எம். எக்ஸ் ஏ. லண்டன்
சட்டத்தரணி திரு. கே. என். சோக்ஸி

வியாபார நோக்கம்

முதலீட்டு வைப்பு, காணி கொள்வனவு, விற்பனவு, கைத்தொழில், இரத்தினக்கற்கள், சந்தைப்படுத்தல் போன்றவற்றுக்கு நிதி அளித்தல்

தொழிலாளர்களுக்கு பங்குகள்வழங்கிய இலங்கையின் முதலாவது பினுன்ஸ் கம்பனி இதுதான்

| வருடம் | வழங்கப்பட்ட பங்கீட்டு முதல் | வருமான சேமிப்பு | முதலீட்டு சேமிப்பு | மற்றைய மற்று விபரம் | வரி விதிப்புக்கு முன்னர் உள்ள முதலீட்டுவைப்பு | வரி விதிப்புக்கு பின்னர் உள்ள நிகர லாபம் | பங்கு லாபம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1973 | 1,200,000 | 1,038,278 | 2,195,700 | 771,277 | 92,070 | 82,070 | 5 |
| 1974 | 1,200,000 | 1,065,951 | 6,045,843 | 2,681,195 | 264,328 | 147,828 | 10 |
| 1975/76 | 1,200,000 | 1,315,706 | 15,400,048 | 9,106,588 | 361,480 | 361,480 | 7·5 |
| 1976/77 | 1,200,000 | 664,721 | 31,894,498 | 4,276,988 | 395,762 | 395,762 | 10 |
| 1977/78 | 1,200,000 | 1,698,335 | 41,203,537 | 3,974,723 | 167,532 | 167,532 | 10 |
| 1978/79 | 1,210,150 | 1,727,524 | 57,284,462 | 1,866,698 | 145,561 | 145,564 | 10 |

வட்டி வீதம்

தவணை வைப்புக்கணக்கு

| முதலீடு செய்யவேண்டிய தொகை | முதலீட்டுக் கால எல்லை | செலுத்தப்படும் வட்டி வீதம் | செலுத்தப்படும் வட்டி வீதம் |
|---|---|---|---|
| ரூபா. 500/- ரூபா. 1,00,000/- | 12 மாதங்கள் | 20 % வருடம் | மாதம்/காலாண்டு |
| ரூபா. 500/- ரூபா. 1,00.000/- | 24 மாதங்கள் | 22 % வருடம் | அரைவருடம்/ |
| ரூபா. 1,00,000/- அதற்கு மேலும் | 24 மாதங்கள் | 24 % வருடம் | வருடந்தோறும் |

புதிய அதிவிரைவான பயனளிக்கும் வைப்புக்கணக்கு

| | | | |
|---|---|---|---|
| ரூபா. 500/- ரூபா. 1,00,000/- | 18 மாதங்கள் | 22 % வருடம் | உங்கள் முதலீடு |
| ரூபா. 500/- ரூபா. 1,00,000/- | 24 மாதங்கள் | 25 % வருடம் | முதிர்ச்சிஅடைந்ததும் |
| ரூபா. 1,00,000/- அதற்கு மேலும் | 24 மாதங்கள் | 27 % வருடம் | முதலீடும் வட்டியும் செலுத்தப்படும் |

முதலீட்டுச் சேமிப்புகள்

| | | |
|---|---|---|
| ஆகக் குறைந்த முதலீடு ரூபா. 50/- | 24 மாதங்கள் | 15 % வருடம் |

✦ இந்த இலாபக்கணக்குகள் ஊழியர்களுக்கு இலாப ஊக்குவிப்புப்பணம் வழங்கியபின் உள்ள தொகையாகும்.

த பினுன்ஸ் கம்பனி லிமிட்டெட்,
249, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

31-3-81வரை ரூபா 10கோடிக்கு மேல் நிலையான வைப்புத்தொகை



BRIGGS & STRATTON

விசேட சலுகை

பம்புகள், வைபிரேட்டர்கள், ஜெனரேட்டர்கள் அல்லது ஏதேனும் யந்திர உபகரணம் வைத்திருப்போருக்கு.
உங்கள் உபகரணத்துக்குப் புத்துயிர் ஊட்டுங்கள், புத்தம்புது பிறிக்ஸ் அன்ட் ஸ்ராட்டன் இயந்திரம் பொருத்துங்கள்.

3 எச்.பி. பெற்ரேல்/மண் எண்ணெய் ரூபா. 3,000/-
5 எச்.பி. பெற்ரேல்/மண் எண்ணெய் ரூபா. 3,600/-
9 எச்.பி பெற்ரேல்/மண் எண்ணெய் ரூபா. 6.950/-



எமது விசேட சலுகையில் -
✶ 100/- பெறுமதிக்கு நீங்கள் விரும்பும் உதிரிப் பாகங்கள்.
✶ இலவசமாகப் பொருத்துதல் சோதனை செய்தல்
என்பன அடங்கும் விசேட சலுகை கையிருப்பு தீரும்வரை மட்டுமே.

பொறியியல், விற்பனை, பராமரிப்புப் பகுதி,
ஹேலீஸ் லிமிட் டெட்,
25, பொஸ்டர் லேன், கொழும்பு 10.
தொலைபெசி: 91181 (7 இணைப்புகள்)

Mel Ads

ஸ்ரீதர் (யாழ். நகர்)
10-30, 2-00, 6-00, 9-30
**The Other Side of Midnight**
கொழும்பில் 100 நாட்களுக்குமேல் ஓடி ஆங்கில படத்தில் கூடிய வசூலைக்கொடுத்த அதி உன்னத சித்திரம்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
லொறி ட்ரைவர் ராஜாக்கண்ணு

லிடோ (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்
ராஜபார்வை

ராஜா [யாழ்ப்பாணம்] தினசரி 4காட்சிகள்
வெற்றிகரமான 7வது வசூல் வாரம்
★ ரஜனிகாந் ★சுஜாதா ★ விஜயன்
★ கராத்தே மணி ★ ரதி
அன்புக்கு நான் அடிமை
[சுஸ்மன் கலர்]

**Windsor** (Jaffna)
Daily 10-30, 2-00, 4-30, 7-00 and 9-30 P. M.
A long awaited Film. Action packed and full of Suspense
A Giant in His Time!
A Legend in His Death!!
He Lives Again!
BRUCE LEE in
**THE GAME OF DEATH**
(Color)
BRUCE LEE'S First Maiden Film depicting to the World the famous Martial Arts, upto this day There is no equal to BRUCE LEE in The Art of KUM PU......
உலக சாம்பியன் புருஸ்லியின் பயங்கரமான கராட்டி சண்டைகள் நிறைந்த படம்

## கப்பலில் தீ!

மணிலா, ஜூன் 22

பிலிப்பைன் தீவுகளுக்கருகில் கப்பலொன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தை அடுத்து கப்பல் தீப்பற்றியுள்ளது. இவ்விபத்தில் கப்பலிலிருந்வர்களில் 160 பேர் கொல்லப்பட்டிருக்கலாமென அஞ்சப்படுகின்றது. கப்பலில் ஏற்பட்ட வெடி விபத்துக்கான காரணம் இன்னும் தெளிவாக்கப்படவில்லை.

(கி—இ)

## வை. எம். சி. ஏ. முத்திரை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

1882ம் ஆண்டு அமைக்கப்பட்ட வை. எம். சி. ஏ யின் நூற்றாண்டு நிறைவை ஒட்டி தபால் பகுதி முத்திரை வெளியிடுகின்றது. முக்கோணவடிவமான ரூ. 2-50 சத முத்திரையை இம்மாதம் 24ம் திகதி கொழும்பு வை. எம். சி. ஏ, யில், தபால் தந்தி தொடர்பு அமைச்சர் வெளியிடுவார்.

யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ.யில் முத்திரையும் முதல் நாள் அட்டையும் வழங்கப்படும். தற்போது இலங்கையில் 34. வை. எம். சி. ஏ. கிளைகள் உள்ளன. வடமாகாணத்தில் மட்டும் 11கிளைகள் உள்ளன. என்பது குறிப்பிடத்தக்கது.

ஹரன் யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்
ஆயிரம் ஜென்மங்கள்
இதுவே யாழ். நகரில் கடைசித் தடவை

வெஸ்லி மானிப்பாய்
தினசரி 6-15, 9-15
சனி, ஞாயிறு 2-30
ரஜனிகாந்த்
தர்மயுத்தம்

யாழ். பல்கலைக்கழக

## நுண்கலை ஆய்வு வட்டம் ஓவியக்காட்சி நடத்தும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலை ஆய்வுவட்டம் அடுத்தமாதம் 16ம், 17ம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஓவியக்காட்சி ஒன்றை நடத்தவுள்ளது. எதிர்வரும் 7ம் திகதிக்கு முன்னர் கலைஞர்களால் அனுப்பப்படும் ஓவியங்கள் இக் கண்காட்சியில் இடம்பெறவுள்ளன.

## இன்றைய பலன்

ஆனி மாதம் 9-ம் திகதி
புதன்கிழமை
(23—6—82)

மேடம்: அருளும் பொருளும் இன்று இணைந்து கிடைக்கும். தொழில் துறையில் ஏற்படும் போட்டியில் வெற்றி உங்கள் பக்கமே. பயணத்துக்கும் இடமுண்டு.

இடபம்: வரவில் உயர்வு தென்படும். பெரியவர்களின் வாழ்த்தும் கிடைக்கும். எழுத்தாளர்களுக்குப் புகழ்குவியும். கலைஞர்களுக்கு சிறப்பான தினம்.

மிதுனம்: அதிக சிந்தனை சிறிய தலையிடியைக் கொடுக்கும். உடல்நலம் பாதிக்கப்படலாம். விளைபொருள்களினால் பணம் விரயமாகலாம். கட்டுப்பாடு அவசியம் தேவை.

கடகம்: மனக்கோட்டை கட்டுவீர்கள். எதிர்பார்த்ததில் ஏமாற்றம்விளையும். இன்ப சகோதரத்தின் காரியங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்.

சிங்கம்: நேர்முகப் பரீட்சைக்கு உகந்த தினம். தெய்வத்தின் அருள் தாராளமாய் கிடைக்கும். அரசியல் வாதிகளுக்கு இன்று சிறப்பான தினம்.

கன்னி: ஏமாற்றத்தின் எதிரொலி பழிவாங்கும் உணர்ச்சியைத் தூண்டும். எதிலும் விரக்தி மனப்பான்மை தென்படும். நண்பர்களைப் பகைத்துக் கொள்ளலாம்.

துலாம்: இதயத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கும். மாதுருவழிப்பெருமைக்கு இடமுண்டு. மனம் போல் யாவும் நடக்கும். கல்வியால் சிறப்பும் கிடைக்கும்.

விருட்சிகம்: வருமானத்தில் திருப்திகரமான நிலை தென்படும். புதிய முயற்சிகளிலும் ஈடுபடுவதற்கு விரும்புவீர்கள்.

தனு: புத்திரர் வழியால் புதினமும் கிடைக்கும்.

தனு: தூரத்துப் பயணம் துயரம் தரலாம். வருமானத்தில் வீழ்ச்சி தென்படும். வைத்திய செலவுக்கு இடமுண்டு. சிறுவருத்தம் வரினும் பெரும் முறையில் கவனிக்கவும்.

மகரம்: கற்கண்டுபோல் இனிக்கும் வாழ்க்கை, காதல் விவகாரங்களுக்கும் இடமுண்டு. களஸ்திர வழியின் மூலம் கனதனம் சேரக்கூடும்.

கும்பம்: அடுத்தவரை நம்புவதால் ஆபத்து மிகவுண்டு. வீண்செலவு வேண்டாம். விபரீதம் விளைந்திடும். துக்க தினமாகும்.

மீனம்: பொதுப்பணி உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். சில்ர் வாழ்க்கையில் அரசியல் பிரவேசத்துக்கும் நல்ல நாள்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## அ வி சங்க நிர்வாகிகள்

(புலோலி)

பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் வித்தியாலய மண்டபத்தில் அதிபர் திரு. ஆ. க. மாணிக்கம் தலைமையில் நடைபெற்ற போது தலைவராக ஆ. க. மாணிக்கமும் (அதிபர்), செயலாளராக ந. சிவசுப்பிரமணியமும், பொருளாளராக பொ. செல்லையாவும் தெரிவுசெய்யப்பட்டனர். உறுப்பினர்கள் 8 பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

(அ)

ராணி தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்) 10-30, 4-30, 7-00, 9-30
**DEVIL'S ISLAND**
விரைவில்! விஸ்வரூபம்

யாழ். மனோகராவில்
வெற்றி முரசு கொட்டும் 50வது நாள்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
ஹவுஸ் புல்! ஹவுஸ் புல்!! ஹவுஸ் புல்!!!
மாதர்கள் கூட்டம் அலைமோதுகிறது
இந்தியாவில் 250 நாட்களுக்கு மேல் ஓடி வெற்றிவாகை சூடியதுடன் வெற்றி விழாவில் பரிசுபெற்ற சிறந்த காதல் காவியம்
வசூலில் சாதனை! சாதனை!! சாதனை!!!
இதுவரை காலமும் திரை உலகம் கண்டிராத மாதர் கூட்டத்தைக் காண்கிறது
"அலைகள் ஓய்வதில்லை"
இனியும் காண்பதற்குத் தயாராய் உள்ளது
"அலைகள் ஓய்வதில்லை"
★ கார்திக் ராதா தியாகராஜன் ★

★ இன்னும் பலர் திறம்பட நடித்த ★
பாரதிராஜாவிற்கு திரைப்பட உலகில் ஒரு நிலையான இடத்தைப் பெற்றுக்கொடுத்திருக்கும் காதல் காவியம் தான்
அலைகள் ஓய்வதில்லை
(கலர்)
வந்து வந்து திரும்பிச் செல்லும் மாதர் குலத்துக்கு எங்கள் மனவருத்தத்தைத் தெரிவிக்கிறோம்.

ரீகல் யாழ். நகர் தினசரி நான்கு காட்சிகள்
ஹவுஸ்புல்! ஹவுஸ்புல்!! ஹவுஸ்புல்!!!
சிவாஜி
கீதா குமாரசிங்க [இலங்கை நடிகை], ஜெயபாரதி, பத்மபிரியா, நாகேஷ், அனுராதா
மோகனப் புன்னகை
(வண்ணப் படம்)
[இரு தடவைகள் தணிக்கைசெய்யப்பட்டு உங்கள் உள்ளத்தைக் களிப்பூட்டவரும் திரைஓவியம்]

சாந்தி (யாழ்நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
5-வது வெற்றி வாரம்

கமல் (இரட்டைவேடம்)
சுஜாதா, அம்பிகா, தங்கவேலு, நாகேஷ்,
கடல் மீன்கள்
—கலர்—

# மடு உற்சவம் இன்று ஆரம்பம்

[மன்னார்]

மடு மாதா ஆலய வருடாந்த முதல் உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி அடுத்த மாதம் 2-ம் திகதி நடைபெறும் திருநாள் திருப்பலிப் பூசையை அடுத்து இடம்பெறும் மாதா திருச்சொரூப சுற்றுப் பிரகாரத்துடன் முடிவடையும்.

திருநாள் திருப்பலி பூசையை மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் திரு. தோமஸ் சௌந்தரநாயகம் ஒப்புக் கொடுப்பார்.

இந்த உற்சவம் தொடர்பாக மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து மன்னார் கச்சேரியில் அரசாங்க அதிபர் திரு. வாமதேவன் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் மன்னார் எம். பி. திரு பி. எஸ். சூசைதாசன், மன்னார்மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர் திரு. பி. எம். செபமாலை, உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. எஸ். பற்குணம், மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் திரு கே. கோபாலரட்ணம், நானாட்டான் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். அமிர்தலிங்கம், முசலி உதவிஅரசாங்க அதிபர் திரு. எஸ் சண்முகம், அடம்பன் உதவி அரசாங்க அதிபர் திரு. ஜி. கிருஸ்ணமூர்த்தி, மன்னார் மாவட்ட குரு முதல்வர் அருட்திரு சேவியர் குரூஸ், பேசாலை மீனபிடிக் கூட்டுத்தாபன நிறைவேற்று முகாமையாளர் திரு. சுந்தரேசு, வவுனியா பொலிஸ் அதிபர் திரு. ஜெயசூரியா, மன்னார் உதவிப் பொலிஸ் அதிபர் திரு. இராஜேஸ்வரன், சுகாதாரசேவைப் பகுதியினர், போக்குவரத்துத் திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு:-

யாத்திரிகர்களின் நலன்கருதி விசேட பஸ் சேவைகள் நடாத்தப்படும். மடுவீதி ரயில் நிலையத்திலிருந்து ரயில் — பஸ் இணைப்பு சேவைகள் நடத்தப்படும். மன்னார் சாலைக்கு மேலதிக பஸ் வண்டிகளைப் பெறுதல். கொழும்பிலிருந்து மடு வீதி வரை விசேட ரயில்சேவைகள் நடத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஆலயச்சுற்றுடலில் சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் ஆலயச் சுற்றுடலில் தற்காலிகவைத்தியசாலைஒன்று அமைக்கப்படும்.

## தற்காலிக நீதிமன்றம்

பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு மடு வீதியிலும், மடு மாதா ஆலயச் சுற்றுடலிலும் தற்காலிகப் பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்படுவதுடன்மேலதிக பொலிசார் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவர். உற்சவகாலங்களில்இடம்பெறும் குற்றச் சம்பவங்களை விசாரணை செய்யும் பொருட்டு ஆலயச் சுற்றுடலில் தற்காலிக நீதிமன்றம் ஒன்றும் அமைக்கப்படும்.

ஆலயச் சுற்றுடலில் தினமும் ஆயிரம் கிலோவுக்கு மேற்பட்ட மீன்வகைகளை குறைந்த விலையில் விற்பனை செய்ய முடியும் என பேசாலை மீன்பிடிக் கூட்டுத்தாபன நிறைவேற்று முகாமையாளர் இக்கூட்டத்தில் தெரிவித்தார்.

யாத்திரீகர்கள் தம்முடன் துப்பாக்கிகளை எடுத்துவர வேண்டாமென கேட்கப்பட்டனவும் துப்பாக்கிகளை எடுத்து வருவோர் அவற்றை மடுவீது பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துவிட்டு உற்சவம் முடிந்தபின் மீண்டும் பொலிஸ் நிலையத்தில் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மடு மாதா ஆலயச் சுற்றுடலில் உள்ள காடுகளில் மிருகங்களை வேட்டையாடுதல், காடுகளை அழித்தல் தடைசெய்யப்பட்டுள்ளது.

அத்துடன் தேக்கம் ஆற்றில் குளிப்பதும் தடைசெய்யப்பட்டுள்ளது. [இ]

# ''இலங்கையின் விடுதலைக்காக முதலில் குரல் கொடுத்தது யாழ் இளைஞர் காங்கிரஸ்''

## யாழ். மேயர் பெருமிதம்

[யாழ்ப்பாணம்]

''இந்திய விடுதலை இயக்கத்தால் கவரப்பட்டு இலங்கையின் விடுதலைக்காகக் குரல் கொடுத்த முதல் இயக்கம் யாழ்பாண இளைஞர் காங்கிரஸ்தான்''.

இநதியத் தூதர் திரு ஏபிரகாமுக்கு அளிக்கபபட்ட இவ் வைபவத்தில் பேசிய யாழ். மேயர் திரு. இராசா விசுவநாதன் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

திரு. தோமஸ் ஏபிரஹாம் இந்தியாவின் தென் மாநிலமான கேரளத்தைச் சேர்ந்தவர். யபழ்ப்பணத்திலுள்ள கல்லூரிகள் இன்று அறிவியல் துறையில் முன்னணியில் திகழ்வதற்கும், தரப்படுத்தல் மற்றும் மாவட்ட கோட்டா முறைகள் மூலம் யாழ்ப்பாண மாவட்ட மாணவர்களின் பல்கலைக்கழக பிரவேசத்தை மட்டுப்படுத்த முனையவேண்டிய அளவுக்கு எமது மாணவர்கள் பல்கலைக்கழக பிரவேசப் பரீட்சைகளில் சோபிப்பதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்தவர்கள் கேரளத்தில் இருந்து வந்து எமது பாடசாலைகளில் விஞ்ஞான பாடங்களைப் போதித்த ஆசிரியர்கள்தாம் என்பதை யாழ்ப்பாண மக்கள் நன்றியுடன் நினைவுகூருகிறார்கள். இலங்கைப் பல்கலைக்கழகப் பட்டதாரிகள்உயர்ந்த ஊதியம் பெறுவதற்காகவேறு பதவிகளை நாடிச் சென்றகாலத்தில் கேரளத்திலிருந்து வந்த ஆசிரியர்கள் தாம் பெரும் சிரமப்பட்டு எமது பாடசாலைகளில் விஞ்ஞான பாடங்களுக்கான படிப்பை ஊக்குவிதத வர்கள். அதனால்தான் அவர்களை இங்கிருந்து அகற்றவேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்பட்டது.

''மலையாளம் பேசும் மக்களுக்கும் யாழ்ப்பாணத் தமிழர்களுக்கும் இடையே வேறுபாடு காணமுடியாது. யாழப்பாணத்தில் இருந்து தமிழகம் செல்லும் தமிழ் மக்களிடம் அங்கு முதல் கேட்கப்படும் கேள்வி ''நீங்கள் கேரளத்துக் காரரா?'' என்பதே.

கேரளத்துக்கும், தமிழகத்துக்கும் யாழ்ப்பாணத்துடன் உள்ளதுபோன்றதே பாரதத்துக்கும் தமிழ் ஈழத்துக்கும் உள்ள தொடர்புமாகும். பாரத நாட்டின் விடுதலை இயக்க வரலாற்றால் எழுச்சி பெற்றவர்கள் நமது மக்கள். அவர்கள் இலட்சிய புருஷர்களாக விளங்குபவர்கள் மகாத்மாகாந்தி, நேரு, சுபாஸ் சந்திரபோஷ், ராஜாஜிபோன்றவர்கள்தாம். அதனால்தான் இந்திய விடுதலைப் போராட்டங்களில் வரலாற்றால் விடுதலை உணர்வும், தேசிய இன உணர்வும் பெற்ற மக்கள் தமது இல்லங்களில் இன்றும் மேற்படி பெரியார்களின் புகைப்படங்களை வைத்துப் போற்றி வருகிறார்கள்.

தமிழினம் தமக்கு நேரிடும் இன்னல்கள் இடுக்கண்களின் போதெல்லாம் தார்மீக ஆதரவை இந்தியாவிடம் இருந்தே எதிர்நோக்குகின்றது. கடந்த ஆகஷ்ட் மாதத்தில் இங்கு தமிழ் மக்கள் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்ட போது தமிழகத்திலுள்ள சகல அரசியல் கட்சிகளும் கட்சிபேதம் கடந்த நிலையில் எமக்காகக் குரல் கொடுத்ததையும், தமிழகத்தின் வரலாற்றிலேயே முதல் தடவையாக தமிழக அரசே ஒரு ஹர்த்தாலை எமக்கு அனுதாபமாக நடத்தியதையும், நாம் மறந்துவிடுவதற்கு இல்லை. பாரதப் பிரதமர் அவர்களே தமிழக அரசியல் கட்சித் தலைவர்களிடம் 'இலங்கையிலுள்ள தமிழர் விவகாரத்தை மத்திய அரசு கவனித்துக்கொள்ளும். உணர்ச்சிவசப்பட்டு அதற்காக நீங்கள் இயக்கங்களை நடத்தி மோதிக்கொள்ள வேண்டாம் என்றாரே!'' இத்தனைக்கும் பண்பாட்டு ரீதியில் இந்தியாவுக்கும் எமக்கும் இடையே பிணைப்பு உண்டு. இது ஆத்மீக தார்மீகசிந்தனைகளால்எழுந்த தொன்று. (சி-மா)


ஓராண்டு நினைவு அஞ்சலி



செல்வி பத்மினி (ராணி) பொன்னுத்துரை

தோற்றம்: 10-3-1948
மறைவு: 3-7-1981

எங்கள் அன்புத் தெய்வமே,

நீங்கள் திடீரென எம்மைத் தவிக்கவிட்டு பிரிந்து சென்று ஓராண்டு பூர்த்தியாகின்றது. எங்களை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில் கொண்ட எமது அன்புத் தெய்வத்தின் ஆன்மா சாந்தியடைய ஆண்டவனைப்பிரார்த்திக்கிறோம்.

இவரின் பிரிவினால் துயருறும்
பெற்றோர், சகோதரர், உறவினர், நண்பர்கள்.
கரம்பன் கிழக்கு,
ஊர்காவற்றுறை. 3610


## இன்று வைரவிழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டிதர் வித்தியாசாலை வைரவிழா இன்று புதன்கிழமை தொடக்கம் 3 நாட்களுக்கு நடைபெறவிருக்கிறது,

வித்தியாசாலை அதிபர் திரு. த. தருமலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் இன்றைய நிகழ்ச்சியில் யாழ் பல்கலைக்கழக கல்வித்துறைத் தலைவர் பேராசிரியர் ப. சந்திரசேகரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார் திருமதி சந்திரசேகரம் பரிசில்கள்வழங்குவார்

பட்டிமன்றம், கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். (மா)

# தரவைப் பாதையில் வாகனங்கள்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் பஸ் சாரதிகள் உட்பட பல வாகனச் சாரதிகள் புதிய தரவைப் பாதை வழியே வாகனத்தைச் செலுத்த ஆரம்பித்துள்ளனர்

மன்னார் மாவட்டத்திலுள்ள வீதிகள் பல வாகனத்தைச் செலுத்த முடியாதளவுக்கு சீர்கேடடைந்துள்ளதாலேயே வாகனச் சாரதிகள் தமக்குத் தரவைப்பாதைகளை வாகனப் போக்குவரத்திற்குப் பயன்படுத்தி வருகின்றனர் எனக் கூறப்படுகிறது.

# இந்துப்போதகர் பயிற்சிக் கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

கிளிநொச்சி, கரைச்சி சைவ வித்தியாவிருத்திச் சங்கம் ஆதாரக்கல்விக் குருகுலத்தின் இந்துப்போதகர் பயிற்சிக் கருத்தரங்கும், ஓராண்டு நிறைவுவிழாவும் எதிர்வரும் 26ம், 27ம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றன.

கிளிநொச்சி குருகுலத்தில் இடம்பெறவிருக்கும் இந்நிகழ்ச்சிகளுக்கு இளைப்பாறிய நீதியரசர் திரு வீ. சிவசுப்பிரமணியம் தலைமைதாங்குவார்.

முதல்நாள் நிகழ்ச்சிகள் 26ந் திகதி காலை 9மணிக்கு ஆரம்பமாகும், அன்றையதினம் இரவு 7 மணிக்கு கலைநிகழ்ச்சிகள் இடம்பெறும். இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் 27ந் திகதி காலை 9 மணிமுதல் பிற்பகல் 2-30 மணிவரை நடைபெறும்.

## ஞானபண்டித

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

ளுக்கும் கல்விச்சாலைகளுக்கும் குறைவில்லை. இங்கு விளங்கும் பிரபல பாடசாலைகளை நாம் மறக்க முடியாது கொக்குவில் இந்துக் கல்லூரி, அதனருகில் இன்றுவரை விழாக்காணும் ஞான பண்டிதா மற்றது சாரதா மகளிர் கல்லூரி.

புலமைப் பரீட்சைகள் என்ன, உயர் பரீட்சைகளின் முடிவுகள் என்ன, ஞான பண்டிதாவின் வளர்ச்சியைப் பறைசாற்ற, கலைகள் என்ன, கலாசாரப் போட்டிகள் என்ன இதன் புகழ்கூட்ட அத்தனையையும் கொண்ட வைபவமாக மாணவரின் கல்வி கலைத்திறன் காட்டும் வைர விழா இன்று புதன் தொடக்கம் 25ம் திகதி வரை மூன்று தினங்கள் சிறப்பாக நடைபெறுகிறது.

வாழ்க ஞானபண்டிதா:
சிறக்க நல் வைரவிழா.

சி. ஸ்ரீதயாளன்

# கருணாநிதிக்கு வெங்கட்ராமன் பாராட்டு

புதுடில்லி, ஜூன். 22

தி. மு. க. தலைவர் திரு. மு கருணாநிதி 25 வருடகாலம் சட்டமன்ற உறுப்பினராகவிருந்துஆற்றிவரும் சேவையைப்பாராட்டி மத்தியபாதுகாப்பு அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவருக்குப் பாராட்டுசெய்தி ஒன்றை அனுப்பிவைத்துள்ளார். (வெ)

## சாயிபாபா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கான பிரேரணையை ஜனாதிபதி திரு ஜே ஆர் ஜெயவர்த்தன நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கொண்டுவந்தார். இதனை அமைச்சரவை அங்கீகரித்தது.

பரீட்சைகளுக்கான இத் தனிப் பிரிவு இரத்மலானையில் அமைக்கப்படவுள்ளது. இதற்காக அரசாங்கம் 15 லட்சம் ரூபாவை ஒதுக்கவுள்ளது

இப்பிரிவு பரீட்சைத் திணைக்களத்தின் வேலைப்பளுவைக் குறைப்பதற்காகவே ஏற்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வெ

## பம்பாயில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

தரையிறங்கியதாகவும் கூறப்படுகிறது

இவ்விபத்தின்போது இரண்டு பயணிகள் காணமல் போனதாகவும், 14 பேரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது விமானத்தில் 94 பிரயாணிகளும் 12விமானச் சிப்பந்திகளும் இருந்தார்களாம். [வெ]

## பிரிட்டிஷ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தவர் ஆகையினாலேயே சார்ள்ஸ் இளவரசர் 30% பிரிட்டிஷ் கலப்புடையவராக விருக்கின்றாரென்றும், ஆனால் அவரது குழந்தை பிரிட்டிஷ் மகாராணியாரின் வயிற்றில் அவதரித்த ஒருவருக்கும், பிரிட்டிஷ் ராஜவம்சத்துடன் நீண்ட நாட்கள் பெரும் உறவுவைத்திருந்தவர்களது பரம்பரையில் வந்த இளவரசி டயனாவுக்கும் பிறக்கின்றபடியால் 58% பிரிட்டிஷ் கலப்புடையதாக விளங்குமெனத் தெரிவிக்கப் பட்டிருந்தது. (கி)

## சிவாலய உற்சவம்

[சரவணை]

ஊர்காவற்றுறை ''சிவன் கோவில் வருடாந்த உற்சவம் கடந்த 19ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது

இம்மாதம் 27ம் திகதிதேரும் மறுதினம் தீர்த்தோற்சவமும் இடம் பெறும். [மா]


# மரண அறிவித்தல்

## வன்னித்தம்பி சின்னத்தம்பி

(ஓய்வு பெற்ற சிருப்பர்)

திரு வன்னித்தம்பி சின்னத்தம்பி (ஓய்வுபெற்ற சிருப்பர், வவுனியா கச்சேரி) காலமானார். அன்னார் வேதவல்லியின் அன்புக் கணவரும், இராசம்மா-கந்தப்பிள்ளை, விசாலாட்சி - அம்பலவாணர், சிவபாக்கியம் - மயில்வாகனம், பிராட்டியார் - கனகரத்தினம், மயில்வாகனம், நடராஜா, மகேசன், நாகரத்தினம் - மகாலிங்கம், நாகேஸ்வரி - ஜெகநாதன், இ. நாகராஜா ஆகியோரின் மாமனுமாவர். அன்னாரின் ஈமைக்கிரியைகள் வியாழக் கிழமை (24-6-82) காலை 8-00 மணிக்கு நடைபெற்று வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

''எயரிடேல்'', 51, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். 3626


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஜூன் மீ 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81
Eelanadu—P. O. Box 49, Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.